Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



ராம்கோ RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/720)

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஆனி 01 | புதன்கிழமை | (15.06.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 259




வித்தியாசத்தை புரியாத அரசியல் தலைவர்கள் 03

போர் விமான இயந்திரம் திருட்டு



13



நான் ஜாம்பவான் ஆகவேண்டும் 07



வாகன நெரிசலுக்குப் புதிய தீர்வு 11


# புலிகளின் நிதி மூலங்கள் புலனாய்வு விசாரணை

## நெதர்லாந்து குழு கொழும்பில்



(கொழும்பு)

சர்வதேச ரீதியாகப் புலிகளின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்வதற்காக நெதர்லாந்து நாட்டின் உயர்மட்டப் புலனாய்வு அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பிற்கு வருகைதரவுள்ளது.

புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாளராகச் செயற்பட்டவரான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்ம நாதனிடமும் இக்குழுவினர் முக்கிய விசாரணைகளை நடாத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு இலங்கை அரசும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நெதர்லாந்து புலனாய்வுப் பிரிவினர் "ஒபரேசன் கொனிக்" என்கிற பெயரில் முன்னெடுத்துவரும் அதிரடி நடவடிக்கையின் ஒரு கட்டமாக இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இந்த உயர்மட்டக்குழு நேற்று கொழும்பு வந்துள்ளது.

நெதர்லாந்து புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு விஜயம் செய்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை நெதர்லாந்து நீதி அமைச்சும் இலங்கை அரசும் ஒழுங்கு செய்துள்ளதாக கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து தூதரகத்தின் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில், நெதர்லாந்து நீதி அமைச்சின் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கொழும்பு சென்றுள்ளனர்.

எனினும் குறித்த அதிகாரிகள் தடுப்பில் உள்ள முன்னாள் புலிகளிடமும்



விசாரணைகளை மேற்கொள்வார்களா என்பது பற்றி தூதரகத்தின் பேச்சாளர் குறிப்பிடவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நெதர்லாந்து புலனாய்வுப் பிரிவினர் (15ஆம் பக்கம் பார்க்க)

## விசேட கண் சிகிச்சை நிலையம் யாழில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் குறைந்த பார்வைக்கான சிகிச்சை நிலையமொன்று (LOW, VISION.CLINIC) சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ஜி. மகிபாலவினால் நேற்றுப் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு முன்னர் அமைந்திருந்த பகுதியில் ஏற்கனவே உள்ள கண் சிகிச்சைப் பிரிவில் இச்சிகிச்சை நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சுமார் 2.5 மில்லியன் ரூபா செலவில் லோவிசன் அமைப்பினால் குறைந்த பார்வைக்கான இச்சிகிச்சை நிலையம் அமைகப்பட்டுள்ளதுடன் வடமாகாணத்தில் அமைக்கப்படும் இரண்டாவது சிகிச்சை நிலையமும் இதுவாகும். ஏற்கனவே வவுனியா வைத்தியசாலையிலும் இத்தகைய குறைந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணங்கிச் செயற்பட தமிழர் விடுதலைக் கூட்டணி தயார்



(கொழும்பு)

தேவையேற்படும் பட்சத்தில் அரசாங்கத்துடன் இணங்கிச் செயற்படுவதற்குத் தான் தயாராக இருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். தெரண தொலைக்காட்சியின் "தெரண360" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

நான் இதுவரை காலமும் ஒருபோதும் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவன் அல்ல. ஆயினும் (15ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டிய பனைமரம் விற்பனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

பனை வளத்தைப் பேணும் முகமாக பனை அபிவிருத்திச் சபையானது பனைதறித்தலை பிரதேச செயலகங்களுடன் இணைத்து மட்டுப்படுத்தி வருகிறது. இதன் பிரகாரம் அத்தியாவசிய தேவைகளான வீட்டு நிர்மாணத்திற்காக மட்டும் குறிப்பிட்ட அளவான பனைகள் தறிப்பதற்கு பனை அபிவிருத்திச் (15ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நிபுணர்குழு வடக்கே வருகிறது யுத்த விதவைகளுக்கு தொழிற்பயிற்சி

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தினால் கணவனை இழந்த விதவைகளுக்குத் தொழிற் பயிற்சிகளை வழங்கும் புதிய செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் முகமாக இந்தியாவிலிருந்து நிபுணர்குழு ஒன்று அடுத்த் வாரம் வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு விதவைகளுக்கு இந்திய அரசின் உதவியுடன் சுய தொழில் பயிற்சிகளை வழங்க இந்திய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுத்து வருவதாக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 800 விதவைகளுக்கு சுயதொழில வாய்ப்புக்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அதற்கு இந்திய அரசு முதற்கட்டமாக 203 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### இணைய மகாநாடு

(கொழும்பு)

10 ஆவது தமிழ் இணைய மகாநாடு, அமெரிக்காவில் பென்சில் வேனியாப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறது. ஜூன் 17 ஆம் திகதி தொடங்கி 19 ஆம திகதி வரை 3 நாட்கள் நடைபெறும் இந்த மகாநாட்டில் 10 நாடுகளில் இருந்து தமிழ் அறிஞர்கள் பங் கேற்கின்றனர்.

இணையத்தில் தமிழ் வளர்ச்சி அடைந்துள்ள விதம், தமிழ் மென்பொருள்கள் பற்றி விவாதிக்கின்றனர்.

## துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்தில் வீட்டிற்குள் முடங்கும் சிறுவர்கள்

### யாழில் 500 சிறுவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 500 வரையான சிறுவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாத நிலையில் வீடுகளில் முடங்கியிருப்பதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யாழ். செயலகத்தில் கிராம சேவையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சிறுவர் தொடர்பாக அண்மையில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமாக (15ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II வினாத் தாள் இணைக்கப்பட்டுள்ளன.

# வலி.வடக்கில் துரித மீள்குடியமர்வு தடைகளை அகற்ற டக்ளஸ் ஏற்பாடு




(தெல்லிப்பளை)

வலி.வடக்கில் பொதுமக்களின் மீள்குடியமர்வுச் செயற்திட்டங்களையும் இப்பணிகள் மேற்கொள்வதில் உள்ள இடர்பாடுகளை அகற்றுவது குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா களநிலையில் சென்று அவதானித்துள்ளார்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாவிட்டபுரம் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடினர்.

மாவிட்டபுரம் பகுதியில் 28 வீதிகள் புதிதாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் 2 பாடசாலைகள், 8 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வைத்திய சாலை என்பன புதிதாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்றும் 2000 கிணறுகள் மீளமைக்கப்படவுள்ளதுடன் மின்சார வசதி, வாழ்வாதார உதவிகள், கூரைத் தகடுகள், சீமெந்து, 5000 ரூபா உதவுத் தொகை காணிகளை துப்புரவு செய்யும் கருவிகள் போன்றவையும் விரைவில் வழங்கப்படவுள்ளன என்றும் அமைச்சர் உறுதி வழங்கினார்.

அத்துடன், நேற்று மாவிட்டபுரம் அரசடி வீதி, சந்தை வீதி, வீமன்காமம் தெற்கு டச்சு வீதி, தெல்லிப்பளை ஆரம்ப வைத்தியசாலையில் வெளிநோயாளர்களுக்கான கட்டட வசதி, மற்றும் சமையல் பகுதி போன்றவற்றிற்கான புனரமைப்பு நடவடிக்கைகளையும் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளை பெயர்ப் பலகைகளை திரை நீக்கஞ் செய்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஆரம்பித்து வைத்தனர்.

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

நண்பர் ஒருவரின் வீட்டிற்கு சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியவரை மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் வழிமறித்து அவரது கழுத்தில் இருந்த 4 பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்ற சம்பவம் உடுப்பிட்டியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் உடுப்பிட்டி வீரபத்திரர் கோயில் வடக்கு வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கே.ஜெயரட்ணம் என்பவரின் தங்கச்சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டதாகும்.கோயில் வடக்கு வீதி வழியாக தமது வீட்டை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மறித்து கசிப்பு குடித்து விட்டு வருகிறீரா எனக்கேட்டு விட்டு, அவரைத் தாக்கினர்.

தாக்குதலின் பின்னர் அவரது கழுத்தில் இருந்த 4 பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு தொண்டமானாற்றுப் பக்கமாக மோட்டார் சைக்கிளில் சென்று மறைந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.இந்தச் சம்பவம் குறித்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மாந்தை கிழக்கில் வீடமைப்பு செயற்றிட்டம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு-மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட கிராமங்கள் யு.என்.கபிராட் நிறுவனத்தின் புதிய வீடுகள் அமைக்கும் செயற்றிட்டத்துக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதில் பயனாளிகளைத் தெரிவு செய்யு நடவடிக்கைகள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடைபெற்று வருவதுடன், ஏற்கனவே மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களில் வீடற்றிருக்கும் குடும்பங்கள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் நேர்ப் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து தற்போது யு.என்.கபிராட் நிறுவனம் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (110)

## பனை தறித்தவர் கைது

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமின்றி தறித்த பனை மரங்களை வைத்திருந்த நபரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட நீதிமன்ற நீதிபதி குறித்த நபரை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்தார். (11)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்காக ஏற்கனவே அறிவித்த நேரத்தில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு என்று அறிவிக்கப்பட்ட இக்கூட்டமானது வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறுமென்று காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

## இரத்ததானம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை மகாத்மா சனசமூக நிலையத்தினால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் இரத்தம் எடுக்கும் பணியில் ஈடுபட்டதாகவும், இதில் அப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இரத்தானம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

## மஹோற்சவம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி இரதோற்சவமும், யூலை முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (104)

## பிரதேச மட்ட விளையாட்டு விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா-2011 இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமாகாண உதவிப் பணிப்பாளர் சு.கனகராஜா, யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ். ஜெ.ரூபசிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி.எச்.பி.கஜான் பிரசன்னா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்றுறை அமைப்பாளர் ம.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (27)

## ஆசிரியரின் கைப்பை திருட்டு

(சாவகச்சேரி)

மீசாலை பவா கடைக்கு அருகில் பேருந்திலிருந்து இறங்கிய ஆசிரியரின் கைப்பையை சாதுரியமாகத் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

குறித்த ஆசிரியர் பேருந்திலிருந்து இறங்கி நின்ற சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த திருடன் அவரிடம் இருந்த கைப்பையை திருடிக்கொண்டு தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த ஆசிரியர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# பக்திபூர்வ பொங்கல் உற்சவம் வற்றாப்பளையில் நடந்தேறியது

(வற்றாப்பளை)

வன்னியில் நடைபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தில் சுமார் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர் என ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ்.குகதாசன் தெரிவித்தார். திங்கள் இரவு உற்சவம் தொடங்கி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பொங்கலுடன் நிறைவு பெற்றது.

நேற்று அதிகாலை பெருமளவு பக்தர்கள் ஆலய முன்பாக தாங்களே பொங்கல் படைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். வடபிரதேச சகல டிப்போக்களும் விசேட போக்குவரத்துச் சேவைகளை நடத்தினார்கள். பெரு மளவான பக்தர்கள் தமது நேர்த்திக் கடனை தீர்க்க செடில் காவடிகள், பறவைக்காவடிகள் சகிதம் ஆலயத்தை தரிசனம் செய்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணியளவில் இராணுவத்தினர் ஹெலிகொப்ரர் மூலம் பூக்களைத்தூவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் விசேட மலர் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பொலிஸார் பூரண பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

கடல் நீரில் அம்மனுக்கு விளக்கேற்றும் அற்புதம் இங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (39,40)

### வடக்கு மீனவர் பிரச்சினை இன்று விசேட பேச்சு

தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பு பிரதிநிதிகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சமாச பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளனர்.

இப்பிரதேசத்திலுள்ள பதினொரு கடற்தொழிலாளர் சமாசத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சமாச மண்டபத்தில் நடைபெறும் இச்சந்திப்பில் கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இந்திய மீனவரின் அத்துமீறிய செயற்பாடு போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாக சமாசத் தலைவர் சி. தவரட்ணம் தெரிவித்துள்ளார். (கா)

## தாளையடியில் அந்தோனியார் திருவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு தாளையடி புனித அந்தோனியார் தேவாலய வழிபாடும் திருச்சொரூப பவனியும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பங்குத்தந்தை ஜேம்ஸ்நாதன் அடிகளாரும், அகஸ்ரின் அடிகளாரும் வழிபாடுகளை நடாத்தினர். நேற்றுக் காலை 6.30 மணியளவில் திருச்சொரூபப்பவனி பூஜைகள் நடைபெற்றன. அந்தோனியார் திருச்சொரூபம் ஆலயத்திலிருந்து புறப்பட்டு வீதிகள் ஊடாகச் சென்று கடற்கரையில் உள்ள தொழிற்பாடுகளை ஆசீர்வதித்து பின்னர் வழிபாடுகள் மற்றும் கொடி இறக்கத்துடன் திருவிழா நிறைவடைந்தது. அன்னதானம் ஆலய நிர்வாகத்தால் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

மருதங்கேணி 551வது டிவிசன் படையணி சிவில் நிர்வாக அதிகாரி லெப்டினன் கேணல் ஜானக டி சில்வா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## குப்பை கொட்டியவர் செலுத்தினார் தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் எச்சரிக்கையை மீறி பொது இடத்தில் பொலித்தீன் கழிவுகளை வீசிய ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றையதினம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கினை விசாரணை செய்த மேலதிக நீதிபதி அ.பிறேம் சங்கர் 1000 ரூபா தண்டப்பணம செலுத்துமாறு உத்தரவிட்டார். (கா)



தனியார் நிறுவனத்தின் வான் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மாலு சந்திப்பகுதியில் தொலைத்தொடர்புக் கம்பத்துடன்மோதி விபத்துக்குள்ளாகி இருப்பதைக் காணலாம். (18)

மனிதனின் மனம் கடுகுப் பொட்டல் போன்றது. அது கிழிந்து நாலாபக்கங்களிலும், ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று உலக விடயங்களோடு ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவது சுலபமல்ல.

- ராமகிருஷ்ணர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சிறந்த பள்ளிக்கூடம்

"என்னிடம் உலகில் ஒருவரை மட்டுமே உயிர்ப்பிக்க வைக்க முடியும். நீங்கள் யாரை விரும்புகிறீர்கள் எனக் கடவுள், உலகம் அழியும் நாளில் கேட்டால் நான் ஷேக்ஸ்பியரையே உயிர்ப்பிக்கக் கோருவேன்: எனில் ஷேக்ஸ்பியரே பின் இந்த முழு இயக்கத்தையும் உருவாக்கி விடுவாரே!" என்று லத்தீன் அமெரிக்க இலக்கிய மேதையாகக் கூறப்படும் ஜோர்ஜ் லூயி போர்ஹே சொன்னார். எழுத்தின் – படிப்பின் சக்தி பற்றி அவர் அப்படிக் கூறியதை மிகை என்று ஒதுக்கிவிட முடியாது.

பிள்ளைகளை வாசிக்கத் தூண்டும் விதமாகப் பாடசாலைக் கல்வி அமையவேண்டும். பாடங்களை மனப்பாடம் பண்ணி பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுத்து வெளியேறத் தூண்டிக் கொண்டிருக்கும் கல்வி முறையால் எதிர்கால சந்ததிக்குப் பயனில்லை.

நம் கல்வி முறையில், முன்பள்ளிகளிலிருந்தே பெரிய மாற்றம் நடைபெறவேண்டும். கற்றுத் தருதல் மற்றும் கற்றுக் கொள்ளல் இரண்டு முறைகளும் சீரமைக்கப்படவேண்டும். பள்ளிக்கூடம் செல்ல பிள்ளைகள் அழுது அடம்பிடிக்கும் காட்சிகள் மாறவேண்டும்.

யாவையும் தாண்டி ஒரு விளையாட்டுப் பூங்காவிற்கு அழைத்துப் போவது போல பள்ளிக்குக் குழந்தைகளை எளிதாக எவ்விதமான மனத்தடையுமின்றி அழைத்துப் போய்வருவது சாத்தியமாக வேண்டும். பந்தைக் கையில் வாங்கியவுடன் குழந்தை கண்ணில் தோன்றும் விளையாட்டிற்கான பரபரப்பு போல புத்தகத்தைக் கண்ணில் கண்டதும் படிக்கவேண்டும் என்ற பரபரப்பு தோன்றும் அளவு கற்றுத் தரப்பட வேண்டும்.

காலத்திற்குக் காலம் கல்வி முறைகளில் மாற்றம் செய்து கொண்டுதானிருக்கிறோம். அகில உலக ரீதியாக விவாதிக்கப்பட்டுவரும், வெளியாகி வரும் கல்விச் சிந்தனைகள் பற்றியும் நாம் தெரிந்துகொண்டுதானிருக்கின்றோம். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வியியல் கல்லூரிகள் என்று படிப்பித்தல் முறைகளும் புதிது புதிதாகச் சொல்லித் தரப்பட்டுத் தான் வருகின்றன. ஆனாலும் இன்றைக்கும் ஆசிரியருக்குப் பயந்து கேள்வி கேட்காமலும், படிப்பில் ஆர்வம் கொள்ள முடியாமலும் பயந்து ஒதுங்கிப் பின்தங்கும் மாணவர்களையும், சவால்களை எதிர்கொள்ளத் தயங்கும் மாணவர்களையும் உருவாக்கியபடியேதான் உள்ளோம்.

தவிரவும், பாடப் புத்தகங்களுக்கு வெளியில் உலகமில்லை என்ற பொய்த்தோற்றம் தான் மாணவர்களைக் கெடுக்கும் மிக முக்கிய செயற்பாடு. மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுவதில்லை என்பது ஒருபுறமிருக்க, ஆசிரியர்கள் பயன்படுத்துவதே அபூர்வம் என்ற அளவில்தான் இருக்கிறது. வேலைக்குச் சேர்ந்த நாளோடு படிக்கவேண்டிய பணி முடிந்துவிட்டது என்று பெரும்பான்மை ஆசிரியர்கள் நம்புகிறார்கள்.

கற்றுக்கொள்ளல் வாழ்நாள் முழுவதும் பின்பற்றப்பட வேண்டிய செயல். அதற்கு வயதோ அனுபவமோ தடையில்லை.

பாடசாலைகளில் நூலகங்களும் பெரும்பாலும் பெயரளவிலேயே இருக்கின்றன. அரிதாகவே மாணவர்கள் அங்கு அனுமதிக்கப்படுவதோ ஊக்குவிக்கப்படுவதோ இருக்கிறது. கதைகள், கவிதைகள் படிப்பது மாணவர்களைக் கெடுத்து விடும் என்ற 'உயர்வான" எண்ணம் ஆசிரியர்களுக்கும் இருக்கிறது; பல பெற்றோர்களுக்கும் இருக்கிறது. இதுபோன்ற அபத்தம் உலகில் வேறில்லை.

பாடப்புத்தகங்களுக்கு அப்பாலும் மாணவர்களைப் படிக்கத் தூண்டுவதாகவே பாடசாலை அமைப்பும் இருக்கவேண்டும். பெற்றோரும் இருக்கவேண்டும், பிற்காலத்தில் பிள்ளைகள் மூலம் சம்பாதிப்பதற்கான முன்னேற்பாடாகக் கல்வியைப் பெற்றோர் கருதுவதும், சம்பளம் பெற்றுக்கொள்வதற்கான தொழிலாகவே ஆசிரியர்கள் கருதுவதும், பணம் வசூலிப்பதற்கான வாய்ப்பாகப் பாடசாலை நிர்வாகங்கள் கருதுவதும் ஒழிக்கப்படவேண்டும்.

குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தார்களென்றால், பின்னேரம் வீட்டுக்குப் போகிறபோது 'ஐயோ, வீட்டுக்குத் திரும்பப்போக வேண்டியிருக்கே" என்று வருத்தப்பட வேண்டும். அப்படி வருத்தப்பட்டார்கள் என்றால் அந்தப் பள்ளிக்கூடம்தான் சிறந்த பள்ளிக்கூடம்.

-ஆசிரியர்-

# எந்தவொரு கிராம சேவையாளர்களும் மக்கள் சேவையிலிருந்து தவறக்கூடாது

## விருது வழங்கும் வைபவத்தில் யாழ்.அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தின்போது உங்களது உயிரைப் பணயம் வைத்து கடமையாற்றினீர்கள். தற்சமயம் யுத்தம் முடிந்து சகஜ வாழ்க்கைக்கு மக்கள் திரும்பிக் கொண டிருக்கையில், அவர்களுக்கு நீங்கள் நூற்றுக்கு நூறு வீதம் சேவையாற்றுவதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கிராம சேவையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மறைந்த கிராம சேவையாளர் ஹேமலதா செல்வராஜாவின் ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அரச அதிபர் இவ்வாறு கிராம சேவையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

கிராம சேவையாளர்களுக்கு விருதுகளோ, வாழ்த்துக்களோ குறிக்கோள் அல்ல. உங்களது சிறந்த சேவையே அதனைப் பெற்றுத்தரும். யாழ்.மாவட்டத்தில் 400 கிராம சேவையாளர்கள கடமையாற்றி வருகின்றார்கள். அவர்களில் ஒருவர்கூட மக்களுக்கான சேவையை வழங்குவதில் இருந்து தவறுகிறார்களேயானால் அது ஒட்டு மொத்த கிராமசேவையாளர்களையே பாதிக்கின்றது. வருங்காலங்களில கிராம சேவையாளர்களுக்குரிய தேவைகள் நிறைவுசெய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்த யாழ். அரச அதிபர், அரச சேவையை மதிக்கின்ற ஹேமலதா உறவினர்கள் அரச சேவையில் உள்ள கிராம சேவையாளர்களைக் கௌரவிக்கும் இந்நிகழ்வு பெறுமதிமிக்கது. அரச உத்தியோகத்தர்களின செயற்பாட்டிற்கு ஒரு எடுத்துக் காட்டு எனவும் தெரிவித்தார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற கிராம சேவையாளர்களுக கான விருதுகளையும், சான்றிதழ்களையும் முறையே யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், ஹேமலதா ஞாபகார்த்த அமைப்பைச் சேர்ந்த முதலியார் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனா.

மேலும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (பா)

# அமைச்சின் அதிகாரிகள், பல்கலை விரிவுரையாளர் வித்தியாசத்தைப் புரியாத அரசியல் தலைவர்கள்

## குற்றம் சாட்டுகிறது விரிவுரையாளர் சம்மேளனம்

(கொழும்பு)

அமைச்சின் அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை நாட்டின் அரசியல் தலைவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமது சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீன் மென்டீஸ் குறிப்பிட்டார்.

கல்வியறிவு இல்லாதவர்கள் நாட்டை நிர்வகிக்கும் போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதாக அவர் குற்றஞ்சுமத்தினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பில் கீழ்த்தரமான கருத்துக்களை வெளியிடும் கல்வியறிவு இல்லாத அரசியல்வாதிகளை மக்கள் அடையாளம் காண வேண்டும் எனவும் கலாநிதி மஹீன் மென்டீஸ் கூறினார்.

எவ்வாறயினும் பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை உயர்கல்வி பிரதி அமைச்சர் நந்திமித்த ஏக்கநாயக்க நிராகரித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்கள் எனவும் செயலாளருக்கு கலாநிதி பட்டமொன்று உள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழு உள்ளிட்ட நிறுவனங்களிலும் கல்வி அறிவுடையவர்கள், புத்திஜீவிகளே கடமையாற்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடும் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண முடியாது எனவும் பேச்சுவார்த்தைகளின் மூலம சிறந்த பலனை அடையமுடியும் எனவும் உயர்கல்விப் பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# ஆசிரியரைக் கடத்திய வழக்கில் சிப்பாய் ஆர்.டி.எஸ்.ராஜபக்ஷ விடுதலை

(யாழ்ப்பாணம்)

கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனைக் கைதியான முன்னாள் இராணுவச் சிப்பாய் ஆர்.டி.எஸ். ராஜபக்ஷ மீது யாழ்.உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த அரியாலை புங்கன்குளம் பகுதியில் இருந்து ஆசிரியர் ஒருவரைக் கடத்தியதான வழக்கில் இருந்து அவர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.அரியாலை புங்கன்குளம் பகுதியில் 1996 ஆம் ஆண்டு நாகராசா செல்வரத்தினம் என்ற ஆசிரியர் குறித்த முன்னாள் இராணுவச் சிப்பாயினால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார் என்று கூறி யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் குற்றவாளிக்கு சார்பாக அரச சட்டத்தரணி பி.ஜே. அன்ரனி ஆஜரானார். இவ்வழக்கு விசாரணைகளின் முடிவில் நீதிபதி எஸ்.பரமராஜன குறித்த கிருசாந்தி குமாரசாமி படுகொலை வழக்கின் மரணதண்டனைக் கைதியான ஆர்.டி.எஸ். ராஜபக்ஷவை அவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு விசாரணைக்கென குறித்த கைதி பூசா சிறைச்சாலையில் இருந்து யாழ்அழைத்து வரப்பட்டிருந்தார் என்றும், இவ்வழக்குத் தீர்ப்பை அடுத்து அவர் மீணடும் பூசா சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாக யாழ்.நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# கெயார் நிறுவனத்தின் கடன் இல்லாத நிதியுதவி

(கட்டுவன்)

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வசாவிளான் தெற்கு J/244 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கெயர் நிறுவனத்தினால் கடன்இன்றிய வாழ்வாதார உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதில் 37 பேருக்கு அவர்களுடைய குடும்பநிலையை கருத்தில் கொண்டு 22 ஆயிரம் ரூபா முதல் 33ஆயிரம் ரூபாவரை உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், சில பயனாளிக்கு முதற்கட்டமாக மாடு வளர்ப்பிற்காக 12 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதைவிட, இரண்டாம் கட்டமாக உதவித்தொகை வழங்குவதற்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (22)

# மானிப்பாய் புனித அந்தோனியார் திருவிழாவில் இரத பவனி வீதியுலாவிற்கு அனுமதிக்கவும்

## பங்குத்தந்தையிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அந்தோனியாரின் இறுதி திருவிழாவின் போது புனித இரத பவனி, வீதியுலா இவ்வருடம் இடம்பெற மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் சர்வ மத ஸ்தாபன பணிப்பாளர் ஆன்மீகவியலாளர் பேராசிரியர் எஸ. லீலாகிருஷ்ணன் கேட்டுள்ளார்.

மானிப்பாய் புனித அந்தோனியாரின் இறுதி திருவிழாவும் - இரத பவனி வீதியுலா வருதலும் எனும் தலைப்பில் வழங்கிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புனித அந்தோனியாரின் இரத பவனி ஆண்டாண்டு காலமாக வீதியுலாவருவது வழமை.

ஆனால், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்த இரத பவனி ஊர்வலம் இடம்பெறவில்லை.

தற்போது போர் ஓய்விற்குப் பின்னர் எமது பிரதேசத்திலும், நாடளாவிய ரீதியிலும் சாந்தி, சமாதானம் அமைதி நிலவுகிறது.

கடந்த காலத்தைப் போன்று புனித அந்தோனியாரின் இரதம் மானிப்பாய் கனகசபை வீதி, செல்லமுத்து மைதானம், கியூ மெடிக்கா - மேதர்ஸ் வீதியூடாக மீண்டும் இருப்பிடத்திற்கு வருவது வழமை.

எனவே கடந்த 10 ஆம் திகதி முதல் ஆரம்பித்த புனித அந்தோனியாரின் இறுதி திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

அன்றைய தினம் புனித அந்தோனியாரின் இரத பவனியை வீதியுலா வருவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனக்கோரி, 120 பேர் கையொப்பம் இட்ட மகஜர் ஆன்மீக தலைவர் பேராசிரியர் எஸ்.லீலாகிருஷ்ணனால் அனுபபி வைக்கப்பட்டுள்ளது.

# தெருவிளக்குகளைப் பொருத்த வடமராட்சி மக்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் பல வருடங்களாக தெருவிளக்குகள் ஒளிராமையால் இரவுவேளைகளில் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக அப்பகுதி பொதுமக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதிகளில் காணப்படுகின்ற தெருவிளக்குகள் சேதமடைந்து நீண்டகாலமாகியும் இதுவரை அவற்றைச் சீர்செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் இரவு வேளைகளில் பயணத்தை மேற்கொள்பவர்கள் எதிரே வாகனம் வருவது தெரியாத நிலையில் வாகனங்களுடன் மோதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடமராட்சிப் பிரதேசசபை, நகரசபை தமது பிரிவுக்குப்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகளைப் பொருத்தி விபத்துக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் தரப்பிலிருந்து கருத்து தெரிவிக்கப்படுகிறது. (100)

# சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

செல்வி உஷானி ஜெயானந்தகுமாரின் ‘அருஞ்சொத்து’ சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு உடுப்பிட்டு மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி.செல்வரத்தினம், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளரும் ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சுந்தரம் டிவகலாலா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி லி.நே.ஜோசப் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூலின் வெளியீட்டுரையை பிரபல எழுத்தாளரான குப்பிழான் ஐ.சண்முகன், நூலின் நயப்புரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் மற்றும் ஏற்புரையை நூலாசிரியர் செல்வி உஷானி ஜெயானந்தக்குமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (109)

# தகவல் கொடுக்கத் தவறியவருக்கு ஐந்து மாதகால சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத நடவடிக்கை எனத் தெரிந்திருந்தும் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கத் தவறினார் என்ற குற்றத்திற்காக மன்னார் வாசி ஒருவருக்கு யாழ. மேல் நீதிமன்றம் ஐந்துமாதம் சாதாரண சிறைத்தண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளிததது.

பயங்கரவாத நடவடிக்கை எனத தெரிந்திருந்தும் பொலிஸாருக்கு அதனைத் தெரியப்படுத்தத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் மன்னார் - உப்புக்குளத்தைச் சேர்ந்த நசறோறு கென்ரி வெஸ்லி என்பவர் மீது 2000 ஆம் ஆண்டு பொலிஸாரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.பரமராஜன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது குறித்த நபருக்கு நீதிபதி ஐந்து மாதங்கள் சாதாரண சிறைததண்டனை விதித்துத் தர்ப்பளித்தார். (பா)

# போலி நாணயத்தாள் அச்சடித்த இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

போலி நாணயத் தாள்களை அச்சிட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமார் உத்தரவு பிறப்பித் துள்ளார்.

போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் இயந்திரம், அதற்குரிய உபகரணங்கள், காகிதாதிகள், கள்ள நாணயத்தாள்கள் ஆகியனவும் மேற்படி சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே கிளிநொச்சியின் பல இடங்களிலிருந்து போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டமைக்கும் தற்போது கைதானவர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் இருநாள் பயிற்சி

(குருநகர்)

யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கலலூரியில் வலை திருத்துதல், வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல், செய்மதி உபகரணம் இயக்குதல் ஆகிய பயிற்சி நெறிகளை சமுத்திரவியல் பல்கலைக்கழக அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ளதாக உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

கடற்றொழில் திணைக்களத்தால் முன்மொழியப்பட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுககு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி சங்கங்கள் 20 பயிற்சியாளர்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அவர்களது முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் கடற்றொழில் பரிசோதகர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டுமெனவும், பயிற்சிகள் இரு நாட்கள் அந்தந்த இடங்களில் வழங்கப்படுமென்றும் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (68)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை - தம்பசிட்டி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 24 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சோ.கங்காதரன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சோ.ஜெயவசீகரன் பிரதம விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அருந்தவநாதன், சணச வங்கி முகாமையாளர் இ.அற்புதகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலைஞர்கள், சமூகசேவையாளர்கள், முதியோர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளதுடன், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.(100)

# சுழற்சி முறையில் உதவித் தொகை

(கட்டுவன்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் மனைப் பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலி.வடக்குப் பிரதேச சமுர்த்தி வங்கியினால் சமுர்த்திப் பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.


இதில் கடன் அடிப்படையில் 5வீத வட்டியுடன் 10ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபா வரையிலான உதவித்தொகை வழங்கப்பட்டு வருவதுடன், இத்தொகையை 15 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என சமுர்த்தி அதிகாரச சபை எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (22)

# “தமிழருவி” வெளிவந்துள்ளது

(தெல்லிப்பழை)

தமிழருவி சஞ்சிகையின் 3 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், புலவர் ம.பார்வதிநாதசிவம், எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தன், குழந்தை சண்முகலிங்கத்தின் செவ்வி, டாக்டர் கந்தையா சோதிதாசன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், விவசாய போதனாசிரியர், பூமதி யோகநாதன், ம.பா.பாலமுரளி, முருகையா ஜெயமதன், எஸ்.நதிபரன், பு.கணேசராசா, திருமதி விஜிதாபிரதாஸன், கே.கணேசதாசன், ம.பா.மகாலிங்கசிவம் ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (44)



யாழ.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஹேமலதா ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வில் முதலாமிடத்தைப் பெற்ற உடுவில் பிரதேச கிராமஅலுவர் இ.எமசன்ட்டிற்கு யாழ்.அரச அதிபரும், இரண்டாம் இடத்தைப் பெற்ற கரவெட்டி பிரதேச கிராம அலுவலர் பா.லலித்திற்கு யாழ்.மேலதிக அரச அதிபரும், மூன்றாம் இடத்தைப் பெற்ற தெல்லிப்பளை பிரதேச கிராம அலுவலர் எஸ்.பூபாலசிங்கத்துக்கு ஹேமலதா ஞாபகார்த்த நிறுவன உறுப்பினர் க.முதலியார் ஆகியோர் விருதி வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.

(படம் - பார்த்தீபன்)

# நட்டாட்டுக் கொடுப்பனவை பெறவுள்ளோர் செயலக காணிக் கிளைக்கு சமுகந்தரவும்

## காரைநகர் பிரதேச செயலகர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படையினரின் முகாம் விஸ்தரிப்பிற்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களில் ஒரு பகுதியினருக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால், கீழே தரப்பட்டுள்ள அக்கொடுப்பனவுகளுக்குரிய உரித்தாளர்கள் தங்களுக்கு காணிக்குரிய பெறுமதி குறித்து அனுப்பப்பட்ட 17ஆவது வெகுமதிச் சான்றிதழுடன் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் தவறாது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக காணிக் கிளைக்கு, நேரடியாக சமுகமளிக்குமாறு காரைநகர் பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

நட்டஈடு வழங்கப்படவுள்ள காணி உரிமையாளர்களின் பெயரும், காணி இலக்கமும் வருமாறு:

சபாரட்ணம் கந்தசாமி (இல: 55), காசிநாதர் தேவேந்திரன் (இல: 09), பொன்னுத்துரை கமலாதேவி (இல: 12), பழனிவேல் ஜெயாதேவி (இல: 15), கதிரவேலு சண்முகரட்ணம் (இல: 16), ஆறுமுகம் கமலம் (இல: 19), சண்முகராஜா நாகராஜேஸ்வரி (இல: 20), கந்தசாமி சிவயோகம் (இல: 21), சிவசம்பு திருநாவுக்கரசு ( இல: 25), லீலாவதி மகாதேவன் (இல: 27), கதிரவேலு சண்முகரட்ணம் (இல: 29), வளர்மதி கந்தசாமி (இல: 30), நடராஜா பரமேஸ்வரி (இல: 31), நமசிவாயம் நாகேஸ்வரி (இல: 32), கமலாதேவி சச்சிதானந்தம் (இல: 33), கதிரவேலு சண்முகரட்ணம் (இல: 34), அம்பிகைபாகன் கெங்காதேவி (இல: 40), செல்லையா ராமுப்பிள்ளை (இல: 41), செல்லத்துரை ஞானேந்திரன் (இல: 42), அன்னம்மா சௌந்தரம் (இல: 47), மகாலிங்கம் தேவராஜா (இல: 54), தவமணி யோகேஸ்வரன் (இல: 116), அருணாசலம் திருநாவுக்கரசு (இல: 133), அருணாசலம் பொன்னம்பலம் (இல: 132), செல்வராசா யோகேஸ்வரி (இல: 127), காசிப்பிள்ளை அன்னபூரணம் (இல: 118), சௌந்தரம் கனகசபை (இல: 119), சௌந்திரம் சிவப்பிரகாசம் (இல: 139), நவரட்ணம் லீலாவதி (இல: 56), சுப்பிரமணியம் ராஜலிங்கம் (இல:63), அருணாசலம் சரஸ்வதி (இல: 672/2), ராமு கந்தையா (இல:71), சரஸ்வதி கந்தையா (இல: 72), சோமசுந்தரம் தனலட்சுமி (இல: 73), பூதன் முருகன் (இல: 75), யோகம்மா கந்தசாமி (இல: 76), கதிரன் நாகம்மா (இல: 77), மகேஸ்வரி சங்கரப்பிள்ளை (இல: 78), மெய்யழகன் ஜெயா (இல: 81), யோகம்மா ஆறுமுகம் (இல: 83), சின்னட்டி வேலன் மற்றும் கதிரன் நாகம்மா (இல: 88), சின்னட்டி முருகன் (இல: 94), சின்னட்டி கந்தையா (இல: 95), செல்வராஜா தேவநாயகி (இல: 98), செல்வராணி முத்துலிங்கம் (இல: 100), கந்தையன் முருகன் (இல: 101), வைத்திலிங்கம் பரமசாமி (இல: 109), பேரம்பலம் பாலசுப்பிரமணியம் (இல: 113), நடராஜா ராஜலட்சுமி (இல: 134), அருணாசலம் சோமசுந்தரம் (இல: 135), அருணாசலம் திருநாவுக்கரசு (இல: 129), குழந்தைவேலு சிவப்பிரகாசம் (இல: 140), இந்திராணி அம்பலவாணர் (இல: 141), ஜயன் செல்லத்துரை (இல: 148), செல்லையா பிள்ளை நடேசன் (இல: 152)

## பாலர் விளையாட்டும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமும் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மும் பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் பாலர் விளையாட்டுக்களும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் தெ. சுகிர்தன் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி. கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ. இரவீநதிரதாசன், கோண்டாவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.என் பிரேம்குமார், ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய போசகர் ச. தியாகராசா மற்றும் கணக்காய்வாளர் கு. தனூரன், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி மாலதிதேவி, குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி சர்மிளா ஆகியோர் சிறப்பு விருந்தனர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (பா)

# சட்டவிரோதமாக மதுபானம் விற்றவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்த ஒருவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா உத்தரவிட்டார்.

யாழ். மாவட்ட மதுவரித் திணைக்களத்திற்கு கிடைத்த தகவல்களை அடுத்து புங்குடுதீவு முதலாம் வட்டாரத்திலுள்ள மூன்று வீடுகள் மீது மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி எஸ். கிருபாகரன் தலைமையில் சோதனை நடாத்தப்பட்டது.

இதன்போது கசிப்பு விற்பனை செய்த ஒருவரும், சட்டவிரோதமாக கள் வைத்திருந்தவர், அரச அனுமதி பெற்ற சாராயத்தை சட்டவிரோதமாக வைத்திருந்தவர் என மூவர் பிடிபட்டனர்.

இந்த மூவருக்கு எதிராகவும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை விசாரித்த நீதிவான், குறித்த ஒருவரை மட்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், ஏனைய இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தார். (கா)

# மாநகரசபை எல்லைப் பகுதியில் ஆதன மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தி

(நல்லூர்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியின் முதலாம் கட்ட ஆதன மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக யாழ். மாவட்ட விலை மதிப்பீட்டு அதிகாரி எஸ். ஜெகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த எட்டு மாதங்களாக இடம்பெற்ற இந்த மதிப்பீடுப் பணிகள் அண்மையில் நிறைவு பெற்றுள்ளது.

இந்தப் பணி முடிவுற்றதை அடுத்து இரண்டாம் கட்ட பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அந்தப் பணிகளில் ஈடுபடுவதற்கு என தென்பகுதியில் இருந்து சில உத்தியோகத்தர்கள் பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

இரண்டு கட்ட பணிகளும் நிறைவுபெற்றதும் மதிப்பீட்டு ஆவணங்கள் மாநகர சபையிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவித்தார். (கா)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(15.06.2011-புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம் வைகாசி 32 ஆம் நாள்.
இராகுகாலம் 11.53-1.23, சுபநேரம் 4.23-5.53
நட்சத்திரம் கேட்டை பி.இ.1.58வரை
திதி: பூரணை பி.இ.2.28 வரை
பூரணை விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** பணப்புழக்கம், தேகநலம்பாதிப்பு, மருத்துவச் செலவு, நண்பர் வருகை, தியாகம்.

**ரிஷபம்:-** பணக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், நண்பர்தொல்லை, முதியோர் ஆசி, காரிய சித்தி.

**மிதுனம் :-** காரியசித்தி, பணப்புழக்கம், தேகநலம் பாதிப்பு, மருத்துவச்செலவு, உறவினர் வருகை.

**கடகம்:-** பணநஷ்டம், காரியத்தடை, தேக நலக்குறைவு, பெரியோர்ஆசி, நண்பர் வருகை.

**சிம்மம்:-** பணக்கஷ்டம், காரியத்தடை, குடும்பத்தில் கலகம், உடல்நலம்பாதிப்பு, நண்பர் தொல்லை.

**கன்னி :-** பணப்புழக்கம், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய சித்தி, உடம்பு ஆரோக்கியம், விபத்து வரலாம்.

**துலாம் :-** குடும்பத்தில் குதூகலம், பணவரவு, உறவினர் வருகை, தேக ஆரோக்கியம், தியாகம்.

**விருச்சிகம்:-** உடம்பு நல்ல சுகம், குடும்பத்தில் மகிழ்ச்சி, மனநிம்மதி, பணம்வரும், விபத்து வரக்கூடும்.


**தனுசு:-** பணப்புழக்கம், தேகஆரோக்கியம், உறவினர்தொல்லை, அவமானம், குடும்பத்தில் குழப்பம்.

**மகரம்:-** பணவரவு, உடம்புநற்சுகம், குடும்பத்தில் நிம்மதி. தூரத்திலிருந்து நல்லசேதி, தியாகம்.

**கும்பம் :-** காரியத்தடை, மனக்குழப்பம், பணக் கஷ்டம், கடன்தொல்லை, நிம்மதிக் குறைவு.

**மீனம்:-** காரியசித்தி, பணநஷ்டம், தேகநலம் பாதிப்பு, நண்பர்தொல்லை, உறவினர் வருகை.

# அந்தோனியார் பெருவிழா சிறப்பாக நிறைவடைந்தது



(யாழ்ப்பாணம்)

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது. நேற்றுமுன்தினம் காலை 5.45 மணிக்கு அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் தலைமையில் முதலாவது திருப்பலியும், பின்பு காலை 6.30 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இன்னும் சில குருக்களுடன் திருவிழாக் கூட்டுத் திருப்பலியும் நடைபெற்றது.

திருப்பலி நிறைவில் புனித அந்தோனியாரின் திருவுடலினால் ஆசீர்வாதம் ஆயரினால் அளிக்கப்பட்டது. பின்னர் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் புனிதரின் தேர்ப்பவனியும் நடைபெற்றது. வழமையாக தேர் பவனி வரும் பாதைகளூடாக இரவு 8 மணிக்குத் தேர் ஆலயத்தை வந்தடைந்தது. பின்னர் திருச்சொரூப ஆசீருடன் திருவிழா நிறைவுற்றது.

இத்தேர்ப் பவனியில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.பொலிஸ் நிலைய அத்தியட்சகர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இத்திருவிழா நிகழ்வுகளை "டான்" தொலைக்காட்சியும், வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்காக பாசையூர் இணையத்தளம் ஊடாகவும் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரும், பாசையூர் இளைஞர் கழகத்தினரும் பொதுச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (21)

இப்ப எங்கட நாட்டில எல்லாமே ஏறுக்கு மாறாகத்தான் நடக்குது!

எங்கேயும், எதிலும் நேர்மை என்பதை அரைச் சேத்துக்கும் காண முடியவில்லை.

ஏனெண்டா சுயநலம், தன்ரகாரியத்தை முடிச்சுக் கொண்டு தான் தப்பிடுவம் எண்ட மனப்பான்மைதான் இதுக்கு அடிப்படை!

அந்தக் காலத்தில முதல்ல தன்ர காரியத்தை விட்டிட்டு மற்றவேன்ரை வேலைகளைத்தான் பாப்பினம்.

முன்னம் தம்பி, அண்ணே எண்டால் வாயால தேனொழுகும். அந்தளவுக்கு ஒரு அந்நியோன்னியம் மக்களிடையே இருந்தது.

இதையேன் சொல்லவாறனெண்டா வருத்தக்காறரும், வயது போனதுகளுந்தான உந்தக் கிளினிக்குக்குப் போறவை.

யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில எந்த நாளும் காலேலையும், மாலேலையும் கிளினிக் நடக்குதே! உதுக்கு வரிசேல போயிருந்து கொப்பியளைக் குடுத்து, வாங்கி வரிசை நகர நகர போய்த்தான் காட்ட வேணும்.

அதுக்கிடேல்ல சிலபேருக்கு இளசுகள் உதவியா வந்திடுங்கள். அதுகள் அங்க இஞ்சையெண்டு ரீல்ஓடி முந்தி அலுவல்களைப் பாத்துக் கொண்டு போயிடுங்கள்.

சில நாளேல கொப்பி குடுத்தெடுக்கவும், வைத்தியரிட்டைக் காட்டவும் நீண்ட நெடுநேரம் செல்லும். டாக்குத்தர்மார் குறைவு போல இருக்கவேணும்.

கிளினிக் கொப்பியள் குடுத்தெடுக்க ஒரு வரிசேல இருந்தெழும்பி, பிறகு டாக்குத்தரிட்டைக் காட்டவும் ஒரு வரிசேல இருந்தெழும்பி...


இதெண்டான்ன பறவாயில்லை. இருக்கமுடியும். மருந்தெடுக்கப் போனாத் தான் கால் கடுக்க நிக்க வேணும். றிப்பீட் எண்டால் வருத்தக்காரர் வராமலே ஆரும் வந்து கொப்பியைக் குடுத்து மருந்து எழு திட்டா வரிசேல நிண்டு மருந்தெடுத்துக் கொண்டு போறதுதான்.

அதுக்கும் எங்களுக்கு உதவிக்கு ஆக்களே இருக்கினம். நாங்கதான் எல்லாத்துக்கும் முறிய வேணும்.

அதுக்கிடேல்லப் பாருங்க, உந்தக் கியூவுக்குப் போனாத்தான் பெலத்த சண்டையள் புடிக்க வேணும். ஒரு கியூ கிளை விட்டு ரெண்டு மூண்டா நிற்கும்.

இதுக்க பிந்தி வந்தவன் உள்ளிட்டு முந்துறதும், அது மட்டுமே நடக்குது. உந்த ஆசுப்பத்திரில வேல செய்யிற மிஸ்சிப் பெட்டையள் பொடியள் கியூவுக்கு வெளியால மருந்து குடுக்கிற கவுண்டருக்க வந்து நிண்டு தங்கடை சொந்தம், பந்தம் தெரிஞ்சதுகளுக்கு வேறை மருந்தெடுத்து விட்டாப் பிறகுதான் எங்களுக்கு.

உப்படிப் பாருங்கோ எங்கட நாட்டில எல்லாமே ஏறுக்கு மாறு தான். பின்ன இல்லையே!



## ஆண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுக்கள்


(பருத்தித்துறை)


புலோலி வடமேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சனசமூக நிலையம் தனது 56ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளி அணிகளுக்கிடையே பல்வேறு போட்டிகளை நடாத்தவுள்ளது.

இதில் கரப்பந்தாட்ட வீரர் அமரர் செல்லையா தெய்வேந்திரம் ஞாபகார்த்தமாக ஐந்து பேர் பங்கு கொள்ளும் ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியினையும், பத்துக் கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியும் நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்களையும், வீர, வீராங்கனைகளையும் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் சனசமூக நிலைய செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று ஜொலிஸ்ரார் இறுதிப் போட்டி





(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும் கொக்குவில் கே.சி.சி.சி அணியும் மோதுகின்றன.

லீக் மற்றும் காலிறுதி, அரையிறுதிப் போட்டிகள் 30 ஓவர்களைக் கொண்ட போட்டியாக நடைபெற்று வந்தபோதிலும், இறுதிப் போட்டி 40 ஓவர்களைக் கொண்ட போட்டியாக நடாத்தப்படவுள்ளது.

ஈ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டு அமைச்சின் செயலாளர் இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளதுடன், பல பிரமுகர்களும் கலந்துகொள்கின்றனர்.

கடந்த இருபது வருடங்களாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் இப்போட்டித் தொடர் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (42)





வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற உடற்கல்விப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்களும், பெண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட வவுனியா இறம்பைக்குள மகாவித்தியாலய வீராங்கனைகளும் விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம்.

## கனிஷ்டன், கபிலன் சிறப்புத் துடுப்பாட்டம் 160 ஓட்டங்களால் மத்திய கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)


ஜூனியஸ் கனிஷ்டன், கபிலன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் 160 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கும் இடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி நேற்று ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி சிநேகபூர்மாக இடம்பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜூனியஸ் கனிஷ்டன் 51, கபிலன் 45, நிரோஜ், டர்வின் தலா 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கலைச்செல்வன், மாதவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டை வீழ்த்தினர்.



பதிலுக்கு ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி 34.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மதன் 19, கலைச்செல்வன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிருபன் மூன்று, யூலியஸ், டர்வின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## ஜெயரட்ணசிங்கம் கிண்ண காலிறுதி தகுதி பெற்றது பற்றீசியன் அணி

(யாழ்ப்பாணம்)

ஓல்ட்கோல்ஸ் அணியை 127 ஓட்டங்களால் வெற்றிபெற்ற பற்றீசியன் அணி வி.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்தின் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் எட்டாவது ஆண்டாக நடாத்திவரும் ஐம்பது ஓவர்களைக் கொண்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் ஆறாவது போட்டி கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. பற்றீசியன்ஸ் அணியும் ஓல்ட்கோல்ஸ் அணியும் மோதிக் கொண்டன.




முதலில் துடுப்பாடிய பற்றீசியன் அணி 44.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 19, சஜீன்திரன் 52, பத்மமுரளி 58, எரிக் 37 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் திலீபன், ஜோ நோயல் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஓல்ட்கோல்ஸ் அணி 24.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜோ நோயல் 51, சீராளன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபேட் ஐந்து, முரளி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன்மூலம் வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் சிறிகாமாட்சி அணியும் மோதவுள்ளமை குறிபபிடத்தக்கது. (42)



யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஜின்னா விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்ட போட்டியில் யாழ். ஐக்கிய அணி கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. யாழ் ஊரேழு ரோயல் அணி 2-1 என்ற கணக்கில் கோல் கணக்கில் வெற்றிபெற்றே கிண்ணத்தைக் கைப்பற்றினது. பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் எம்.எம். ஏ குத்தூஸ் வெற்றிக் கிண்ணத்தை அணித்தலைவருக்கு வழங்குவதைக் காணலாம். இப்போட்டி ஜின்னா மைதானத்தில் அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த தலைவர் யார் வீரர்களிடம் கருத்துகேட்பு

(ஹமில்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் அடுத்த தலைவராக யாரை நியமிக்கலாம் என்பது குறித்து அணி வீரர்களிடம் அந்நாட்டு கிரிக்கெட் சபை கருத்துகளைக் கேட்டுள்ளது. உலகக் கிண்ணத்திற்குப் பின் நியூசிலாந்து அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து வெட்டோரி விலகிவிட்டார். இதையடுத்து தலைவர் பதவிக்கு பிரென்டன் மக்கல்லம், ராஸ் டெய்லர் ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இவர்களில் யாரைத் தலைவராக நியமிக்கலாம் என்று கருத்துக் கூறுமாறு 20 முன்னணி கிரிக்கெட் வீரர்களிடம் அணி நிர்வாகத்தினர் கருத்து கேட்டுள்ளனர். பொதுவாக அணியின் வீரர்கள், தலைவர் ஆகியோரை நிர்வாகம்தான் தேர்ந்தெடுக்கும். இந்நிலையில் நியூசிலாந்து அணியின் தலைவரை நியமிப்பது குறித்து வீரர்களிடம் வெளிப்படையாகக் கருத்துக் கேட்டிருப்பது புதிய அணுகுமுறையாகக் கருதப்படுகிறது.

## இலங்கை வரவுள்ள ஆஸி

அவுஸ்ரேலிய அணி வரும் ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் இலங்கைக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் மற்றும் இரண்டு இருபது - 20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் பல்லேகல மைதானத்திலும் ஒரு டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பல்லேகலவில் இதற்கு முன்னர் ஒரே ஒரு டெஸ்ட் போட்டி நடைபெற்றது.

போட்டி அட்டவணை ஆகஸ்ட் 6: முதல் இருபது - 20, பல்லேகல, ஆகஸ்ட் 8: 2 ஆவது, இருபது - 20, பல்லேகல, ஆகஸ்ட் 10: முதல் ஒரு நாள், பல்லேகல, ஆகஸ்ட் 14: 2 ஆவது ஒரு நாள், அம்பாந் தோட்டை, ஆகஸ்ட் 16: 3 ஆவது ஒரு நாள், அம்பாந்தோட்டை, ஆகஸ்ட் 20: 4 ஆவது ஒரு நாள், கொழும்பு, ஆகஸ்ட் 22: 5 ஆவது ஒரு நாள், கொழும்பு, ஆகஸ்ட் 31 - செப். 4: முதல் டெஸ்ட், காலி, செப்டம்பர் 8-12: 2 ஆவது டெஸ்ட் பல்லேகல, செப்டம்பர் 16-20: 3 ஆவது டெஸ்ட் கொழும்பு.

# வீரர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிப்பு

தென்கொரியாவில் ஆட்டநிர்ணய சதியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் வீரர்கள் அதை ஒத்துக் கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த இரு வார கால அவகாசத்தை மேலும் நீடிப்பதாக தென்கொரியா வின் தொழிற்சார் கால்பந்தாட்ட லீக் ஒன்று அறி வித்துள்ளது.

கே லீக் எனும் இந்த கால்பந்தாட்ட லீக்கை சேர்ந்த 10 வீரர்கள் ஆட்ட நிர்ணயச் சதி குற்றச் சாட்டு காரணமாக கைது செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இரு போட்டி களில் தமது அணி தோல்வியடைவதற்காகப் பணம் பெற்றுக்கொண்டதாக இவ்வீரர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 8 பேர் டேஜியோன் சிட்டிசன் எனும் கழகத்தை சேர்ந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் 120 மில்லியன் வொன் (சுமார் 11 மில் லியன் ரூபா) பணத்தைப் பெற்று ஏனைய 7 சகாக்களுடன் பகிர்ந்துகொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் போட்டிகளில் விளையாட ஆயுட் காலத் தடையுடன் 7 வருடகால சிறைத்தண்டனை யும் விதிக்கப்படலாம்.

இதேவேளை வீரர் ஒருவர் கடந்த மாதம் விடுதி அறையில் இறந்த நிலையில் கண்டுபிடிக் கப்பட்டார். அவர் எழுதிய தற்கொலை குறிப்பில் ஆட்ட நிர்ணய சதி தொடர்பான குறிப்புகள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆட்டநிர்ணய சதியில் சம்பந்தப்பட்ட வீரர்கள் குற்றத்தை ஒப்புக் கொண் டால் குறைந்த தண்டனை விதிக்கப்படும் என கே லீக் அறிவித்திருந்தது. அதற்கான இருவார கால அவகாசம் கடந்த திங்கட்கிழமையுடன் முடி வடைந்தது.

ஆனால், அக்கால அவகாசத்தை நீடிப்பதாக அந்த லீக் அறிவித்திருந்தது. எனினும் புதிய காலக் கெடு எப்போது முடிவடைகிறது என்பதை மேற் படி லீக் அறிவிக்கவில்லை.

# வீரர்களை விமர்சிக்கவில்லை மறுக்கிறார் ரொபின்வான்

ஆர்செனல் கால்பந்து அணியின் அதிரடி ஆட்டக்காரரான ரொபின் வான் பெர்சைஸ் சில இங்கிலீஷ் வீரர்களை விமர்சித்த தாக தகவல் வெளியாகியுள்ளது.

சில இங்கிலீஷ் வீரர்கள் விருந்து நிகழ்வுகளைக் கூடுதலாக அனுபவிக்கிறார்கள். இதனால் அவர்களது ஆடும் காலம் குறுகிவிடும் என ரொபின் கூறியதாக அந்தத் தகவலில் தெரிவிக் கப்பட்டிருந்தது.

இது குறித்து 27 வயது ரொபின் டுவிட்டரில் விளக்கம் அளித்தார். இங்கிலீஷ வீரர்கள் என தனிப்பட்ட முறையில் எனது விமர்சனத்தைக் கூறவில்லை. நம்மைப் போன்ற வீரர்கள் உரிய கவனத்துடன் இருந்தால் தான், நீண்ட காலம் போட்டி களில் சாதிக்க முடியும் எனக் கூறி இருந்தேன்.

இங்கிலீஷ் வீரர்களை நான் விமர்சிக்கவில்லை. வீரர்களை மதிப்பிடுவதற்கு நான் யார்?. ஸ்பெயினின் பார்சிலோனா, செலினா அணி வீரர்களை மதிக்கிறேன். அவர்களுடன் விளை யாட வேண்டும் என்ற முனைப்பும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இங்கிலீஷ் வீரர்களை விமர்சித்ததாக வந்த தவறான தகவலை உலகக் கால்பந்து ரசிகர்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் ரொபின் வான் வேண்டுகோள் விடுத்தார்.

# கிரிக்கெட்டில் ஓய்வுபெறும்போது ஜாம்பவானென அழைக்கவேண்டும்

(ஆன்டிகுவா)

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் போது, எல்லோரும் என்னை ஜாம்பவான் என்று அழைக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் உள்ளதென மேற்கிந்தியத்தீவு வீரர் ஆன்ட்ரூ ரசல் தெரிவித்தார்.

ஒரு கிரிக்கெட் வீரர், அவரது திறமையை எப்போதும் சிறந்த அணிக்கு எதிராகத்தான் நிரூபிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். இதுபோல சிறந்த அணியான இந்தியாவுக்கு எதிராக அதிக ரன்கள் எடுத்தது மறக்க முடியாது. இருப்பினும் போட்டித் தொடரில் தோல்வியடைந்தது சற்று வருத்தமாக இருந்தது.

எனது சிறப்பான ஆட்டம் மேற்கிந்தியதீவு அணிக்காக தொடர வேண்டும் என்று விரும்புகின்றேன். இதற்காக கடின முயற்சிகள் எடுப்பேன். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் போது, ஆன்ட்ரூ ரசல் ஜாம்பவான் என்று எல்லோரும் குறிப்பிட விரும்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை கிரிக்கெட் மகளிர் அணிக்கு பாதுகாப்பு படையில் தொழில்வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி யின் வீராங்கனைகளில் பெரும் பாலானோர் இலங்கை பாது காப்புப் படைகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு அனுசரணையாளரைத் தேடுவதற்கான இலங்கை கிரிக்கெட் சபை முயற்சியில் அதிக வெற்றிகள் கிடைக்காத நிலையில் அவ்வீராங்கனைகள் பாதுகாப்புப் படைகளில் இணைந்துள்ளனர்.

இவ்வீராங்கனைகள் படை களின் தாக்குதல் நடவடிக்கை கள் எதிலும் பங்குபற்றமாட்டார கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இலங்கைக் கடற்படையில் தான் விரைவில் சேர்க்கப்படுவார் என எதிர் பார்க் கப்படுவ தாக இலங்கை மகளிர் கிரிக் கெட் அணியின் தலைவி சசிகலா சிறிவர்த்தன பி.பி.சி. சிங்கள சேவையிடம் கூறியுள்ளார்.

இவர்கள் இலங்கை தேசிய மகளிர் கிரிக்கெட் குழாமிலுள்ள அணியிலுள்ள 30 வீராங் கனைகளும் விரைவில் பாதுகாப்புப் படைகளில் சேர்க்கப்படுவர் என நான் நம்புகிறேன். ஏற்கெனவே 90 சதவீதமானோர் சேர்க்கப்பட் டுள்ளனர். 15 பேர் விமானப் படையிலும் 13 பேர் கடற்படை யிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என சசிகலா சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வீராங்கனைகள் இராணு வம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரிக்கெட் அணி களில் இடம்பெறுவர். அதே வேளை, தேசிய அணியின் பயிற்சிகளில் பங்குபற்றுவதற் கும் சுதந்திரம் உண்டு என அவர் கூறினார்.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு நிரந்தர அனுசரணை யாளர் ஒருவரை தேடும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்நிலையில் ஒவ்வொரு சுற்றுப் போட்டியின் அடிப்படையில் அனுசரணையாளரை தேடும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட் டுள்ளனர்.

# கால்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்த இந்தியாவில் ஆர்ஜன்ரீனா, வெனிசுலா போட்டி

கால்பந்து விளையாட்டை பிரபலப்படுத்தும் நோக்கில் ஃபிபா, ஆர்ஜென்ரீனா - வெனிசுலா அணிகள் மோதும் நட்புறவு போட்டிக்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்திய ரசிகர்கள் விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடியவர்கள். கிரிக்கெட்டுக்கு இங்கு சிறப்பான வரவேற்பு உள் ளது. இதே போல கால்பந்து ஆட்டத்தையும் இந் தியாவில் பிரபலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இவ்வாறு சர்வதேச கால்பந்து சம்மேளனத் தலைவர் சீ.ஃப் பிளாட்டர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் விளையாடும் ஆர்ஜென்ரீனா வும், வெனிசுலாவும் பலம் வாய்ந்த அணிகள். முன்னணி வீரர்கள் அனைவரும் இந்த ஆட்டத்தில் பங்கேற்கின்றனர். எனவே விறுவிறுப்புக்குப் பஞ்சம் இருக்காது.

சர்வதேச அளவில் கால்பந்து விளையாட்டுக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். எனினும் கால்பந்து பிரபலமடையாத நாடுகளில் அதனை மேம்படுத் தும் வகையில் ஃபிபா சிறப்புத் திட்டங்களை வகுத்துள்ளது. இதற்காக ஏராளமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியை நடத்த அனைத்து வகையிலும் உதவியாக இருந்த இந்திய கால்பந்து கூட்டமைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் அதில் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தியாவிலேயே மேற்கு வங் கத்தில்தான் கால்பந்து விளையாட்டு மிகவும் பிரப லம் பெற்றது. கொல்கத்தாவில் மெஸ்ஸி விளை யாடுவதை தங்கள் ஊருக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறோம். அவ ருடைய ஆட்டத்தைக் காண ஆவலுடன் காத் திருக்கிறோம் என்று கொல்கத்தா கால்பந்து ரசிகர்கள் தெரி வித்துள்ளனர்.

# மேற்கிந்திய அணி அபாரமான வெற்றி

(ஆன்டிகுவா)

இந்தியாவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் 103 ரன்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அபார வெற்றி பெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் ஆன்டிகுவாவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 249 ரன்கள் எடுத்தது. இதில் போலார்ட் 70, சிமென்ஸ் 67 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் குமார் மூன்று, மிஸ்ரா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய இந்திய அணி 39 ஓவர்களில் 146 ரன்கள் மட்டுமே எடுத்து, 103 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் ரோகித் சர்மா 39, பட்டேல் 26, ஹோலி 22 ஓட்டங்களை எடுத்தனர். நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய மர்டின் ஆட்டநாய கனா க த தெரிவானார்.




# தலைவர் பதவிக்கு தகுதியற்றவனல்ல

(கேப்டவுன்)

தலைவர் பதவிக்கு நான் தகுதியானவன் அல்ல என, தென்னாபிரிக்க அணியின் துணைத் தலைவர் அம்லா தெரிவித்துள்ளார். அணியின் தலைவர் பொறுப்புக்கு டிவிலியர்ஸ் மிகவும் தகுதியானவர். தலைவர் பதவி என்பது சாதாரன விடயமல்ல. இதற்கு நிறை யப் பொறுப்புகள், கடமைகள் உள்ளன. எனவே இப்பதவிக்கு நான் தகுதியானவன் அல்ல. துணைத் தலைவர் பதவி போதுமான தாக கருதுகிறேன். ஸ்மித் தலைவர் பொறுப் பில் இருந்து விலகியவுடன், நான் தலைவராக நியமிக்கப்படலாம் என ஊடகங்கள் கருத்து வெளியாகின. இது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் தற்போது எனது கவனம் முழுவதையும் துடுப்பாட்டத்தில் செலுத்தியுள் ளேன். வரும் 2015இல் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க விரும்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# போர்க்குற்றச்சாட்டு உண்மையா? பொய்யா? அரசாங்கம் விசாரணை நடத்துவது அவசியம்

## பேராசிரியர் றொகான் குணரட்ன வலியுறுத்து



(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றது உண்மையோ-பொய்யோ, அதுபற்றி இலங்கை அரசாங்கம் விசாரிக்க வேண்டும். அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்க வேண்டும் என்று பேராசிரியர் றொகான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

புலிகள் ஆதரவு சக்திகளாலும், மனிதஉரிமை அமைப்புகளாலும் கூறப்பட்டு வந்த குற்றச்சாட்டுகளை முறியடிக்கின்ற முதல் நடவடிக்கையாக இலங்கை இராணுவத்தின் போர்க்கருத்தரங்கு அமைந்திருந்தது.

உண்மையான கள நிலவரத்தை வெளிப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு இரண்டு ஆண்டு காலம் பிடித்துள்ளது.

இதற்கு இவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டியதில்லை. அரசாங்க சக்கரம் மிகவும் தாமதமாகவே சுழல்கிறது.

புலிகளின் செயற்பாடுகள் உள்நாட்டில் இருந்து அனைத்துலக மட்டத்துக்குச் சென்று விட்ட நிலையில், இலங்கை இராணுவம் தகவல் நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இதன்மூலம் இலங்கை இராணுவம் மதான குற்றச்சாட்டுகளை முறியடிக்கலாம்.

கடந்த காலங்களில் இலங்கை இராணுவம் தகவல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனக்குறைவாகவே இருந்துள்ளது.

அமெரிக்காவில் பயிற்றப்பட்ட இலங்கையின் தகவல் நடவடிக்கை அதிகாரிகள் போர்முனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எல்லா இராணுவங்களும் போரைச் சந்திக்கும்போது, பொய்யான குற்றச்சாட்டுகளை முறியடித்து உண்மையைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், தகவல் நடவடிக்கை ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

உலகில் எந்தவோர் போருமே பொது மக்கள் பாதிக்கப்படாமல் நடந்ததென்று நான் கேள்விப்பட்டதில்லை. இலங்கைப் போரும் அதற்கு விதிவிலக்கானது அல்ல.

சம்பவங்கள் தொடர்பான தவறான புரிதல்களைத் தவிர்க்க, இலங்கை அரசாங்கம் பொதுமக்களினதும், புலிகளினதும் இழப்புகள் பற்றி சரியான கணக்கெடுப்புகள் நடத்த வேண்டும்.

இது மிகவும் கடினமான காரியம். ஏனென்றால், புலிகள் பொது மக்களையும், தமது பணியாளர்களையும் முன்னரங்குகளில் நிறுத்தியிருந்தனர்.

புலிகளின் சமையற்காரர் கொல்லப்பட்டால், அவரை ஒரு பொது மகன் என்றே அரசசார்பற்ற நிறுவனங்கள் பட்டியலிடும்.

எனவே இலங்கை அரசுக்கு பொது மக்கள், புலிகளின் மரணங்கள் பற்றி சரியான தகவல்களைத் திரட்ட வேண்டிய பொறுப்பு உள்ளது.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரான செயற்பாடுகள் பற்றி இலங்கை ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டால் மிகவும் நல்லது. போரின் இறுதியில் இலங்கை அரசாங்கம் பிரகடனம் செய்த போர்த் தவிர்ப்பு வலயத்தில் பொதுமக்களுக்கு அருகே புலிகள் தமது பீரங்கிகளை நிறுத்திச் சுட்டதாக இலங்கை அரசாங்கம் கூறியிருந்தது. இதன்போது கள நிலைமைகள் எவ்வாறு சமாளிக்கப்பட்டது என்ற வெள்ளை அறிக்கை ஒன்றை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதைச் செய்யாது போனால் உண்மைகளும், பரப்புரைகளுக்கும் இடைவெளி ஏற்பட்டு விடும். அது புலிகளுக்கும் ஏனைய தரப்பினருக்கும் வாய்ப்பாகி விடும்.

சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான காட்சிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கண்டிப்பாக விசாரிக்க வேண்டும்.

அது உண்மையோ, பொய்யோ அனைத்துக் குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்பட்டுப் பதிலளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நாட்டுக்கு எதிரான சூழ்ச்சித்திட்டம்; நான்கு பல்கலை மாணவர் கைது

(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும், அதில் ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டதாகவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மிரிஹான பொலிஸாரினால் குறித்த மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் உரிமை பறிக்கப்பட்டுள்ளதாகவும், போலியான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மாணவர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் என்.எல்.ஏ. கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

## தருஸ்மன் அறிக்கையை தெளிவுபடுத்தும் ஆவணம் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது

### வெளிவிவகார பிரதி அமைச்சர் கூறுகிறார்


(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் தருஸமன் அறிக்கை விடயத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்தும் வகையிலும் தெளிவுபடுத்தும் ஆவணம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துவருகின்றது. அதனை விரைவில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்புவோம் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில், தகவல் வெளியிடுகையிலேயே பிரதி அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். அமைச்சர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் தருஸமன் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாட்டை ஏற்கனவே மிகவும் தெளிவாகக் கூறிவிட்டது. அது தொடர்பான எமது கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த அறிக்கையில் உள்ள சில விடயங்கள் தொடர்பில் எமது பக்கத் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.



எனவே அது தொடர்பில் தெளிவுபடுத்தும் ஆவணம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருகின்றது. அவ்வாறு தயாரிக்கப்படும் விளக்க ஆவணத்தை விரைவில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு அரசாங்கம் அனுப்பும் என்றார்.

## லெபனானிலுள்ள இலங்கைப் பணிப்பெண்ணுக்கு ஆணிகளை விழுங்கக்கொடுத்த எஜமானி

(கொழும்பு)

லெபனானில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண்ணுக்கு பானத்தில் ஆணிகளை கலந்து கட்டாயப்படுத்தி அருந்தக் கொடுத்துள்ளதால் தற்போது குறித்த பெண் அந்நாட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலியைச் சேர்ந்த மூன்றரை வயது குழந்தையின் தாயான இந்திக்கா மல்காந்தி என்ற பெண்ணே தற்போது சிகிச்சைக்காக லெபனான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கைப்பெண் இலங்கையில் உள்ள தனது கணவனிடம் இச்சம்பவம் குறித்து தொலைபேசி மூலம் அறியப்படுத்தியுள்ளதாகவும், அங்கு தொழில் வழங்குநரால் தனக்கு ஏற்பட்ட கொடுமைகளை கூறியுள்ளதுடன், உடனடியாக தன்னைச் சொந்த நாட்டிற்கு திருப்பி எடுக்குமாறு கூறியுள்ளார்.

இந்திக்கா மல்காந்தி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக லெபனானிற்கு பணிப்பெண்ணாக சென்று 6 மாதங்களாகின்றது என்று அவரது கணவன் தெரிவித்துள்ளார்.

மல்கான்திக்கு அவரது வீட்டு எஜமானி கடந்த இரு வாரங்களாக ஆணிகளை பானத்துடன் கலந்து கட்டாயப்படுத்தி அருந்தக் கொடுத்துள்ளார். அதன்பின் குறித்த பெண் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்கான்தியின் கணவன், லெபனானிற்கு பணிப்பெண்ணாக அனுப்பிய முகவரகத்துடன் தொடர்பு கொண்டு அவரை இலங்கைக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியதற்கு 2 இலட்சம் செலுத்தும்படி முகவரகம் தெரிவித்துள்ளது.

## நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்த புதிய சட்டமூலம்

(கொழும்பு)

நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான புதிய சட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தற்போதுள்ள சட்டத் திட்டங்களின் குறைபாடுகளை களையும் வகையில் இந்தச் சட்ட மூலம் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்தலத்திலேயே அபராதம் விதித்தல், தனியார் மற்றும் பொதுக்காணிகளில் நுழைந்து சோதனை மேற்கொள்ளல் ஆகிய அதிகாரங்களை வழங்கும் வகையில், நுளம்புப் பரவல் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## இலங்கைமீது பொருளாதாரத் தடை தமிழக சட்டமன்றத் தீர்மானத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் கடும் கண்டனம்

(கொழும்பு)

தமிழக சட்ட மன்றில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென தமிழக சட்டமன்றில் அண்மையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் வகையில் தமிழக சட்ட மன்றத்தின் தீர்மானம் அமைந்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எச்.எம். ஹாரீஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தை வடக்கு கிழக்கு முஸ்லிம்களும் வன்மையாகக் கண்டிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் முதலீடுகளை செய்துள்ள சில நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் இந்தத் தீர்மானம் பாதிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

## போதைப் பொருள் வர்த்தகரைக் கைது செய்த பொலிஸ் அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

கொழும்பின் பிரதான போதைப் பொருள் வர்த்தகரை கைது செய்த பொலிஸ் அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கொழும்பிற்கு போதைப் பொருள் விநியோகிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த முன்னணி போதைப் பொருள் வர்த்தகர் ஒருவரை நான்கு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு நேற்றைய தினம் போதைப் பொருள் வர்த்தகரைக் கைது செய்த பொலிஸ் அதிகாரிகளுக்கு தொலைபேசி வாயிலாக கடுமையான மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் போதைப் பொருள் வர்த்தகரைக் கைது செய்த பொலிஸ் அதிகாரிகள் கடும் அச்சத்துடன் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

**24. அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பள்ளிவாசல் | நாம்புவ | தைனமோ | மடி | காக்கும்பலகை | |
| பத்திரிப்பு | பாதட்டிய | மின்சுருள் | | மின்உயர்த்தி | மஸ்ஜித் |

01. உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?

02. சைக்கிள் விளக்கினுக்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?

03. வலையில் அகப்படும் மீன்கள் சேரும் மூலையின் பெயர் யாது?

04. இஸ்லாம் மார்க்கத்தினரின் சமய வழிபாட்டிடத்தின் பெயர் யாது?

05. அகழ்வுக் கைத்தொழில் மாணிக்கக்கல், தாதுக்கள் கொண்ட கூடையின் பெயர் யாது?

**25.**

| | | | |
|---|---|---|---|
| கத்தரிக்கோல் | கைவில்லை | பாக்குவெட்டி | கவர்ச்சுத்தியல் |
| அரம் | தீதாள் | கைத்தாளம் | உடுக்கு |

01. சிறுபொருள்களைப் பெருப்பித்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

02. கத்தியைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

03. இரும்பாணியைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

04. தாளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

05. தைக்கும்போது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்

**26. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| இல. | விற்பனையான பொருட்கள் | விலை ரூ.சதம் | தேவையான அளவு | விலை ரூ.சதம் |
|---|---|---|---|---|
| 01. | 1 Kg மா | ரூ.45.00 | 2 Kg | .................... |
| 02. | 1 கதிரை | ரூ.325.00 | 4 | .................... |
| 03. | 500g பருப்பு | ரூ.18.00 | 1 Kg 500g | .................... |
| 04. | 8 பென்சில் | ரூ.48.00 | 10 | .................... |
| 05. | 2 பால்மா | ரூ.400.00 | 10 | .................... |
| | | | மொத்த விலை | .................... |

**27. 'நான் பாடசாலைக்குச் சென்ற முதல்நாள் அனுபவம்' என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் அமைந்த 5 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருந்தல் வேண்டும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்விமுரசு

வெளியீடு 18



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01. பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று. எவ்வளவு ஆசைகள் மனதில் ஏற்றிவைத்த மக்களுக்கு ஏற்பட்ட கதியினை கணக்கிட முடியாது. உலகத்தையே துன்பத்தில் ஆழ்த்திவிட்டது இந்தச் சுனாமிப் பேரலை. கணக்கிட முடியாத உயிர்களை, உடைமைகளை எல்லாம் இழந்த மக்கள் யாரை நினைக்கப் போகிறார்கள். யார்தான் உதவி செய்யப்போகிறார்கள். குடும்பமே முற்றாக அழிந்தவர்கள் போனாலும் குடும்பத்தில் தனியாகத் தவிக்கும் சிறுவர்களை நினைத்தால் வேதனை வருகிறது. ஆண்டவர் இப்படிக் கணக்கை முடித்துதாரா என்பது கேள்விக்குறிதான். எனவே நாங்கள் துன்பப்பட்டவர்களுக்கு ஏலுமான உதவியைச் செய்தல் வேண்டும்.

01. மேல் கூறப்பட்ட விவரணம் எதைப் பற்றியது?

02. உடைமைகள் என்பது எவற்றைக் குறிக்கும்?

03. உயிர் என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக.

04. ஆசை என்பதன் எதிர்சொல் ஒன்று தருக.

05. உமது மனதில் சோகத்தை ஏற்படுத்திய ஒரு பகுதியை எழுதுக?

06. குடும்பம் என்பது யாரைக் குறிக்கும்?

07. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை உள்ள பெயர்ச்சொல் தருக.

08. 'இன்பம்' என்பதன் எதிர்ப்பதம் இரண்டு உண்டு. அவற்றைக் கூறுக.
1.................... 2....................

09. வாழ்க்கை யாரினால் நிர்ணயிக்கப்படுகிறது எனக் கூறப்படுகின்றது?

10. கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எப்பகுதியை அண்டி வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர்?

**02. பின்வரும் ஒழுகின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

01. சென்று / வீடு திரும்பினார் / கடவுளை / கோவிலுக்கு / வணங்கி

02. கேட்டு / சொல் / பெரியோர் / நன்று / நடத்தல்

**03. பின்வரும் கூற்றின் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழியை எழுதுக.**

01. ஒருவருடன் பழகும்போது அளவுடன் பழகுதல் வேண்டும்.

02. எந்தச் செயற்பாடாயினும் ஏனையோர் உதவியை எதிர்பாராது நாமே செய்தல் நன்று.

**04. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.**

1. பறவைகள் :........................................
2. மேசைவிரிப்பு:........................................
3. தலை :........................................

**05. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச் சொல் தருக.**

1. Flowr :........................................
2. He :........................................
3. sky :........................................

**06. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.**

1. கிரி :........................................
2. பொ(த்)த :........................................
3. இ(ந்)தி ஆப்ப :........................................
4. கண்ணாடிய :........................................

**07. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. பின்வருவனவற்றில் வேர் மூலம் இனப்பெருக்கம் செய்வது
   1. வாழை 2. தேக்கு 3. பூவரசு
2. பூக்கள் மூலம் எண்ணெய் பெறப் பயன்படும் தாவரம்
   1. சூரியகாந்தி 2. செவ்வந்தி 3. மல்லிகை
3. மனிதனுக்கு உதவும் செயற்பாடுடைய பறவை
   1. குயில் 2. கொக்கு 3. காகம்
4. மூலிகையாகப் பயன்படும் தாவரம் எனக் கருதப்படுவது?
   1. குப்பைமேனி 2. கீரை 3. மல்லிகை

**08. பின்வருவனவற்றிக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

1. பதிவுத் தபால் ஒன்றுக்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி என்ன?
   1. ரூபா 40.00 2. ரூபா 15.00 3. ரூபா 20.00
2. வௌவாலின் இடப்பெயர்ச்சிக்கு உதவும் ஓர் அங்கம்
   1. கண் 2. கால் 3. காது
3. தரப்பட்ட மரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
   1. புளி 2. மா 3. தென்னை
4. நீரில் மிதக்கக்கூடிய ஒரு பொருள் எது?
   1. பனிக்கட்டி 2. பால் 3. குண்டூசி

**09.** சீரான சுற்றுப் பருமன் உடைய பனை மரம் ஒன்றின் முனைகள் ஒழுங்காக இருக்கத் தக்கவாறு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டப்பட்ட குற்றிகளுக்கு வழங்கத்தக்க கணிதப் பெயர் என்ன?

........................................

**10.** குமார் தனது சம்பளத்தின் 1/2 பகுதியை உணவுக்காகவும் 1/4 பகுதியை ஆடை வாங்கவும் செலவு செய்துவிட்டு, மிகுதியை சேமிப்பிலிட்டான். அவனுடைய சம்பளம் ரூபா 4800 எனின், அவன் ஆடை வாங்கச் செலவு செய்த பணம் எவ்வளவு ரூபாய்?


........................................

**11.** தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

........................................




**12. பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்துச் சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**




கமலாவும் விமலாவும் அரையாண்டுப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் விபரத்தை வரைபு காண்பிக்கின்றது. கமலா விமலாவை விட 60 புள்ளிகள் குறையப் பெற்றாள் எனின், விமலா பெற்ற புள்ளிகள் எத்தனை?

........................................

**13.**




அருகில் தரப்பட்ட கூட்டற் பிரசின்னத்தில் △ இனால் ஓர் இலக்கமும் △ இனால் ஓர் இலக்கமும் காட்டப்பட்டுள்ளது எனின் △ இனாலும் □ இனாலும் குறிப்பிடப்படும் இலக்கத்தை எழுதுக.

□ ........................ △ ........................

**சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**14.** இரு எண்களைப் பெருக்கும்போது கிடைப்பது 20. அவ்விரு எண்களையும் கூட்டும்போது கிடைப்பது 9. அவ்விரு எண்களும் எவை?

........................................

**15.** ஒரு விருந்துபசாரத்தில் மொத்தமாக 80 பேர் பங்குபற்றினார்கள். அதில் ஆண்களின் எண்ணிக்கையவிட பெண்களின் எண்ணிக்கை 24 அதிகமாகும். எனவே அங்கு காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை யாது?

........................................

**16.** ஒரு செவ்வக வடிவ மைதானத்தின் நீளம் 250 மீற்றர். அகலம் 150 மீற்றர் இதன் சுற்றளவு எத்தனை மீற்றர்?

........................................

**17.** நந்துவின் நிறை 26 kg 500g சுந்து, பிந்து இருவர்களினதும் நிறைகள் சமன். நந்து, சுந்து, பிந்து மூவரினதும் நிறை 82 kg 200g எனின் பிந்துவின் நிறை என்ன?

........................................

**18.** பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று, பி.ப. 9.50 மணிக்கு நிறைவடைந்தது. பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக.

........................................

**19.** 215.3 உடன் 34.8 இனைக் கூட்டுக.

........................................

**20.** ஒரு குறிப்பிட்ட பரீட்சை விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களில் மட்டும் நடைபெற்றது. 200 பேர் பரீட்சைக்குத் தோன்றினர். அவர்களில் 100 பேர் கணிதமும், 120 பேர் விஞ்ஞானமும் சித்தியடைந்தனர். விஞ்ஞானம் சித்தியடையாதோர் எத்தனை பேர்?

........................................

**கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


**21.** ரூபா 20.00 இற்கு 25 ரொபிகள் வாங்கலாமாயின், ரூபா 80.00 இற்கு எத்தனை ரொபிகள் வாங்கலாம்?

........................................

**22.** ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை ரூபா 48.00 எனின், 650 கிராம் உருளைக்கிழங்கின் விலை என்ன?

........................................

**23. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் மூலிகைத் தாவரத்தின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**



(1) ........................ (2) ........................ (3) ........................ (4) ........................


குன்றிமணி, சதைகரைச்சான், ஊமத்தை, ஆடாதோடை, கற்றாளை, நொச்சி, ஆமணக்கு, கண்டங்கத்தரி, பொன்னாவரசு, குப்பைமேனி

விசேட வினாத்தாள் II ☆ தரம் 05 - 2011 ☆ கல்விமுரசு


# வாகன நெரிசலுக்குத் தீர்வு




நாளுக்கு நாள் சனத்தொகை அதிகரித்து வருவதோடு, வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணமே இருக்கிறது. வாகன அதிகரிப்பினால் போக்குவரத்து சிக்கல்களை சகிக்கமுடியாமல் திண்டாடுகின்ற மக்களை தினமும் நாம் அவதானிக்கிறோம். இதில் நாங்களும் உள்ளடக்கம்தான். இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடுவதில் உலகம் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு திரிவதென்னமோ உண்மைதான். ஹாங் புஹான் என்னும் 21 வயதுடைய பெண்ணொருவர் இதற்கான தீர்வொன்றை உருவாக்கியிருக்கிறார்.



நீர்நிலைகள், வீதிகள், பாலைவனப் பகுதி மற்றும் பனிப்பிரதேசங்களில் செல்லக்கூடிய வோல்க்ஸ்வகென் அகியுவய (Volks wagen Aqua) என்னும் ஒரே வாகனத்தின் மாதிரியினை ஹாங் புஹான் உருவாக்கியிருக்கிறார். 'ஹூவர்கிறாப்' என்னும் காற்றலையில் இயங்கும் படகுபோன்ற வடிவமைப்பில் இந்தக் காரினையும் உருவாக்கியிருக்கிறார். இது ஐதரசன் எரிபொருளில் இயங்கக் கூடியது. ஆகையினால் புகை வராது. மாறாக நீர்தான் வெளியேறும். இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் ஒன்று ஹூவர் பகுதியை இயக்குவதற்குப் பயன்படும். மற்றையது வாகனத்தினை சீர்மைப்படுத்த பயன்படும் என்பது சிறப்பம்சமாகும். இந்தக் கார் மணிக்கு 103 கிலோமீற்றர் என்ற வேகத்தில் செல்லக்கூடியது. ஜேர்மனில் இருக்கின்ற கார் தயாரிப்பு நிறுவனம் இந்த வோல்க்ஸ் வகென் அகியுவா காரின் உருவாக்கத்திற்கு உதவுகிறது. இந்த பல்லூடக கார் எதிர்கால சந்ததியினருக்கு வரப்பிரசாதமாக இருப்பதோடு, இதனைப் போனற வசதிகள் எந்த வாகனததிலும் இருக்காது என கண்டுபிடிப்பாளர் ஹாங் புஹான் தெரிவித்துள்ளார். சீனாவின் எக்ஸூஹவா பல்கலைககழக பொறியியல் பீடமாணவியின் இக்கண்டுபிடிப்பு எதிர்காலத்தில் சாதாரண மக்களின் அத்தியாவசிய போக்குவரத்துச் சாதனமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.




இந்தச் செய்தி உங்களை நிச்சயம் சந்தேகப்பட வைக்கும். இது உண்மைதானா? ஆம்! நாளுக்கு நாள் விணணையும் தாண்டிப் போய்க்கொண்டிருக்கும் விஞ்ஞானிகளின் தொழில் நுட்பப புரட்சிகளில் இதுவும் ஒன்று. இன்றெல்லாம் மனிதனுக்கு சமமாக ஏன் மனிதனை விட மேலான ரோபோக்கள் கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால்தான் என்னமோ மனிதன் ரோபோவைத் திருமணம் செய்யும் அளவுக்கு வந்து நிற்கின்றது. தற்போது. அச்சு அசல் மனிதனை போலவே அசைவுகளை ஏற்படுத்துவது மனிதன் அல்ல ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்ட ரோபோ. டென் மார்க்கைச் சேர்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரான Henrik Scharfe என்பரால் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.





# பெரிய நீச்சல் குளம்

சிலியில் உள்ள 1கிலோ மீற்றர் நீளமுள்ள இந்த நீச்சல் குளம்தான் உலகின் மிகப்பெரிய நீச்சல்குளம் என்ற சாதனையைப் படைத்துள்ளது. இதன் மொத்த பரப்பளவு 20ஏக்கர் ஆகும்.



# தவளை இறைச்சி



"தவளை தன்வாயாலே கெடும்" என்பது பழமொழி. இப்போது தவளைகள் கெடுவது தன்வாயால் அல்ல மனிதர்களது வாயால். ஆம்! ரசித்து; ருசித்து; உண்பதற்காக தவளைகள் தோல் உரிக்கப்பட்டு இறைச்சியைப்போன்று சமைக்கப்படுகிறது. சீனச் சந்தைகளில் தவளை இறைச்சி விற்பனை செய்யப்படுகிறது. மற்றும் இந்தோனேசியாப் பகுதியிலும் தவளைகளைச் சமைக்கின்றனர்..

தவளைக்கறி சாப்பிட நீங்களும் ரெடியா..?

# கிரிக்கெட் விபரங்களை உடன் தெரிந்துகொள்ள

உலக அளவில் அனைவரும் விரும்பிப் பார்க்கும் விளையாட்டான கிரிக்கெட் போட்டியின் Score boardI எந்த இணையதளத்திற்கும் செல்லாமல், நேரடியாக நம் குரோம் உலாவியின் மூலம் உடனே தெரிந்து கொள்ளலாம். கூகுள் குரோம் உலாவியின் வெப் ஸ்டோர் நாளுக்கு நாள் புதிதாக ஏதாவது ஒரு சேவையை அறிமுகப்படுத்திக்கொண்டே இருக்கிறது.

அந்த வகையில் இன்று நாம் கிரிக்கெட் விளையாட்டின் ஸ்கோர் போர்டை நேரடியாக நம் குரோம் உலாவியில் பார்க்கலாம். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் இணையத்தள முகவரியை நம்முடைய குரோம் உலாவியில் கொடுத்து வரும் திரையில் Install என்ற பொத்தானை முடுக்கி ஒரே நிமிடத்தில் நம் குரோம் உலாவியில் கிரிக்கெட் ஸ்கோர் போர்டு நிறுவலாம். இனி நம் உலாவியில் C என்ற ஐகானை முடுக்கி நொடியில் கிரிக்கெட் போட்டியின் ரன் மற்றும் கூடுதல் விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு முறையும் இணையத்தளம் சென்று பார்ப்பதற்கு பதில் தேவைப்படும் நேரம் நொடியில் கிரிக்கட் போட்டி பற்றிய விபரங்களை உடனடியாகக் கொடுக்கும் இந்த கூகுள் நீட்சி நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

கணினி மூலை

**இணையத்தள முகவரி:**
https://chrome.google.com/webstore/detail/ijhlikjoigjegofbedmfmlcfkmhabldh#

# உறக்கமின்மைக்கு...




உறக்கமின்மை நோயைக்குணப்படுத்தக்கூடிய தொப்பியொன்றை வைத்தியர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதன் தொழிற்பாடு மிகவும் சுலபமானது. இந்தத்தொப்பியோடு இணைந்த பையில் குளிர்ந்த நீர் ஊற்றப்படுகின்றது அல்லது ஐஸ் கட்டிகள் போடப்படுகின்றன. அதை தலையில் அணிந்ததும் அது தலையில் குளிர்ச்சியை ஏற்படுத்தி உறக்கத்தை உண்டாக்குகின்றது. மூளை ஓய்வு பெற மறுக்கின்றபோது உறக்கமும் கண்களைத் தழுவ மறுக்கும். இது பொதுவான விடயம். மூளை சூடாக இருப்பது இதற்கு ஒரு முக்கிய காரணம். எனவே மூளையைக் குளிர்ச்சியடைய வைத்து ஓய்வு பெறச்செய்வதுதான் இந்த தொப்பியின் வேலை. இந்தத்தொப்பியை அணிந்து கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினை உள்ளவர்களும், மற்றவர்களைப்போல் நிம்மதியாகத்தூங்கலாம். அமெரிக்க ஆய்வாளர்கள்தான் இந்தத்தொப்பியை உருவாக்கியுள்ளனர். அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் இலட்சக்கணக்கான மக்கள் இந்தப் பிரச்சினையால் அவஸ்தைப்படுகின்றனர். இவர்களுள் அநேகமானவர்கள் தூக்க மாத்திரைகளையும் பாவிக்கின்றனர். தூக்க மாத்திரைகள் வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியவை. எனவே இத்தகையவர்களுக்கு இந்தத்தொப்பி பாதுகாப்பான ஒரு மாற்றீடாக அமையும் என்று நம்பப்படுகின்றது. நெற்றிக்குக்கீழ் இருக்கின்ற மூளைப்பகுதியை இந்தத்தொப்பியின் மூலம் குளிரச்செய்யலாம். அதன் மூலம் அது மூளையை ஓய்வு பெறச்செய்து உறக்கத்தைக்கொண்டு வரும்.

# அமைச்சர் பதவியில் தயாநிதிமாறன் நீடிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது

## கம்யூனிஸ்ட் பரதன் தெரிவிப்பு

(ஹைதராபாத்)

**2 ஜி.ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக புகார்கள் எழுந்துள்ள நிலையில், மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன் பதவியில் நீடிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன் கூறியுள்ளார்.**



2 ஜி.ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக தயாநிதி மாறன் மீது குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு வருகின்றன. ஆனால் அவர் தனது பதவியை ராஜினாமா செய்யாமல் இருந்துவருகிறார். அவர் மத்திய அமைச்சரவையில் தொடர்ந்து இருப்பதை நீண்ட காலத்திற்கு நியாயப்படுத்த முடியாது. அவர் தனது ஜவுளித் துறை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தே தீரவேண்டும். 2 ஜி. ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் புதிதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்த அமைச்சர், பதவி விலக பிரதமர் மன்மோகன்சிங் உறுதி அளிக்க வேண்டும் என்றும் பரதன் கேட்டுக்கொண்டார். ஏற்கனவே காலதாமதமாகிவிட்ட நிலையில் மாறனைப் பதவியில் இருந்து விலக்க பிரதமர் மன்மோகன்சிங் மேலும் கால தாமதம் செய்யக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

2 ஜி.ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு விசாரணை ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, இன்னொருபுறம் இந்த ஊழலில் மேலும் மேலும் அமைச்சர்கள் சிக்கிவருவது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும், புகாருக்கு உள்ளான தயாநிதி மாறன், இனியும் காலதாமதம் செய்யாமல் தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் பரதன் கேட்டுக் கொண்டார்.

## ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு பிரதமர் அலுவலகம் பொறுப்பு ஜோஷியின் அறிக்கையை திருப்பி அனுப்பிய சபாநாயகர்

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு பிரதமரின் அலுவலகமே பொறுப்பு என்று குற்றம் சாட்டியிருந்த நாடாளுமன்ற பொதுக் கணக்கு குழுவின் 270 பக்க அறிக்கையை சபாநாயகர் மீரா குமார் நிராகரித்து முரளி மனோகர் ஜோஷிக்கே திருப்பி அனுப்பி விட்டார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து விசாரிக்க முரளி மனோகர் ஜோஷி தலைமையில் நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்த குழுவின் தலைவர் ஜோஷி தயாரித்த அறிக்கையில் இந்த ஊழலுக்கு பிரதமர் அலுவலகமே பொறுப்பு என்றும், ஊழல் குறித்த முழு விவரத்தையும் தெரிவித்திருந்தார். அப்போதைய அமைச்சர் ராசா இந்த ஊழலைச் செய்யாமல் தடுக்க பிரதமர் அலுவலகமும் மத்திய அமைச்சரவை செயலாளரும் தவறிவிட்டனர். என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

அந்த விசாரணைக் குழுவில் பெரும்பான்மையாக இடம் பெற்றிருந்த காங்கிரஸ், மற்றும் அதன் ஆதரவுபெற்றிருந்த உறுப்பினர்கள் அந்த அறிக்கையை நிராகரித்தனர். அவ்வாறு நிராகரிக்கப்பட்ட அந்த அறிக்கையை சபாநாயகர் பார்வைக்கு ஜோஷி அனுப்பி வைத்திருந்தார். அந்த அறிக்கையை தற்போது சபாநாயகர் மீராகுமார் நிராகரித்து ஜோஷிக்கு திருப்பி அனுப்பிவிட்டார்.

இந்தியச் செய்திகள்



முதல் அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக கடந்த திங்கட்கிழமை டெல்லிக்கு சென்ற ஜெயலலிதாவை, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா சந்தித்துப் பேசினார்.

# செம்மொழி மாநாட்டு இலச்சினையை அழிக்க பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட "ஸ்ரிக்கர்"

(திருப்பூர்)

பிளஸ் 1, பிளஸ் 2 பாடப் புத்தகங்களில் அச்சிட்டுள்ள, செம்மொழி மாநாடுஇலட்சினையை மறைக்கும் வகையில், அதன் மீது ஒட்ட, பச்சை நிற ஸ்டிக்கர் வழங்கப்பட்டுள்ளது.




ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை, வரும் கல்வி யாண்டு முதல் சமச்சீர் கல்வித் திட்டம் செயற் படுத்த, கடந்த தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்தது. இதற்காக, 216 கோடி ரூபாய் செலவில் 6.5 கோடி புத்தகங்கள் அச்சிட, தி.மு.க. ஆட்சியில் இருக்கும் போதே உத்தர விட்டது. புதிதாக பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க., அரசு, அத்திட்டத்தை கைவிட்டுள்ளது. இது தொடர்பாக, நீதிமன்றம் வழக்கு நடைபெற்று வருகிறது. அனைத்துப் பாடசாலைகளும் இன்று திறக்கப்பட உள்ளன. பிளஸ் 1,பிளஸ் 2 புத்தகங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக் கப்பட்டுள்ளன. அம் மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட 1.35 கோடி புத்தகங்களின் கடைசிப் பக்கத்தில், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு இலட்சினை அச்சிடப்பட்டுள்ளது. இப்புத்தகங்களில் உள்ள இலட்சினையை மறைக்கும் வகையில், அதன் மீது ஸ்டிக்கர் ஒட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டது. 10 வகையான அளவுகளில் இரண்டு இலட்சம் ஸ்டிக்கர், திருப்பூர் மாவட்ட கல்வி அலுவலகத்தில் இருந்து கோரப்பட்டிருந்தன. அதன்படி பச்சை நிறத்திலான "பிளெய்ன் ஸ்டிக்கர்" வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் தேவையான ஸ்டிக்கர் வழங்கி, புத்தகங்கள் மீது ஒட்டிய பின்பே, மாணவர்களுக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# காங்கிரஸ்,தி.மு.க. கட்சிகளிடையே சிண்டுமுடிய பத்திரிகைகள் முயற்சி

## கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)



காங்கிரஸ் கட்சிக்கும், தி.மு.க.விற்கும் இடையே, சிண்டுமுடிய சில பத்திரிகைகள் முயற்சிப்பதாக, கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது: கடந்த 10ஆம் திகதி, அறிவாலயத்தில் கட்சியின் உயர்நிலை செயற்திட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்ததும், பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடந்தது. அப்போது, பத்திரிகையாளர்கள், 31 கேள்விகள் கேட்டனர். இதில், 22 கேள்விகள், காங்கிரசுக்கும், தி.மு.க.விற்கும் உள்ள உறவை, எப்படியாவது துண்டிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியை விமர்சித்து, நான் ஏதாவது கூறினால், அதை பெரிதுபடுத்தி, இருவருக்கும் இடையே கலகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு கேட்கப்பட்டவை.மொத்தம் கேட்கப்பட்ட 31 கேள்விகளில், 22 கேள்விகள் காங்கிரசுக்கும், தி.மு.க.விற்கும் இடையே சிண்டு முடியும் குணம் கொண்டவை. இதைக் கவனித்தால், பத்திரிகைத தர்மத்தைக் குலைக்கும் செயலிலே, பத்திரிகையாளர்களே ஈடுபடலாமா என நினைக்கத் தோன்றுகிறது. இவ்வாறு கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

## தவறான வரைபடத்தை வாபஸ்பெற்றது அவுஸ்ரேலியா

(மெல்பேர்ன்)

எல்லை மாநிலங்களான ஜம்மு-காஷ்மீர் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியவை இல்லாமல் இணையதளத்தில் வெளியிட்ட இந்திய வரைபடத்தை அவுஸ்ரேலியா திரும்பப் பெற்றுக்கொண்டது.

அவுஸ்ரேலியாவில் உள்ள இந்தியக் குழுக்களிடம் இருந்து புகார்கள் வந்ததையடுத்து அந்த வரைபடம் திரும்பப் பெறப்பட்டதாக குடியுரிமைத்துறை செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்களில் இருந்து அந்த வரைபடம் பெறப்பட்டு, குடியுரிமைத்துறை இணையத்தளத்தில் தவறுதலாக வெளியிடப்பட்டுவிட்டதாக அந்தச் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

# ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே விரைவில் கப்பல் சேவை ஆரம்பமாகும்

## ஆயத்தப்பணிகள் நடைபெறுவதாக அமைச்சர் வாசன் தெரிவிப்பு

(சென்னை)

ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையேயான கப்பல் போக்குவரத்துச் சேவையைத் தொடங்கவும் மத்திய அரசு துரித நடவடிக்கை எடுத்து வருவதுடன், அதற்கான ஆயுதப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் நிறைவடைந்ததும், அந்தக் கப்பல் சேவையும் ஆரம்பிக்கப்படுமென ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி - கொழும்பு இடையே 104 ஆண்டுகளுக்கு பிறகு நேற்றுமுன்தினம் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை தொடககி வைத்த மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவிக்கையில்,

வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணிகள் கப்பல் சேவை தூத்துக்குடிக் கொழும்பு இடையே சிறப்பாகத் தொடங்கப்பட்டு உள்ளது. இதனால் வ.உ.சிதம்பரனார் கண்ட கனவு நிறைவேறியுள்ளது. இது மகிழ்ச்சி, பெருமை அளிக்கிறது. வ.உ.சிதம்பரனாருக்கு மேலும் புகழ், பெருமை சேர்க்கும் வகையில் மத்திய அரசு இந்த கப்பல் சேவையை வ.உ.சி.க்கு அர்ப்பணிக்கிறது

இந்தியா - இலங்கை இடையே விமான சேவை உள்ளது. விமான சேவையை விட கப்பல் கட்டணம் குறைவு ஆகும். அனைத்து தர மக்களும், குறிப்பாக நடுத்தர மக்களும் இந்தச் சேவை மூலம் பயன்பெற வாய்ப்பாக அமையும் என்றார்.

## உலகச் செய்திகள்

# கடுமையான போருக்கு மத்தியிலும் செஸ் விளையாடும் கடாபி

(ஜாவியா)

லிபியாவில் கடாபி தரப்பு மற்றும் எதிர்த் தரப்புக்கு இடையிலான மோதல், கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஜாவியா, பிரிகா, ஜின்டான் ஆகிய நகரங்களில் இரு தரப்புக்கிடையிலான மோதல்கள் வலுப் பெற்றுள்ளன. கடாபி இராணுவத்தின் இரு வெடிபொருள் கிடங்குகள் மீது, "நேட்டோ" விமானப் படைகள் நேற்றுமுன்தினம் குண்டு வீசி தாக்கி அழித்தன.



இந்நிலையில், நேற்றுமுன்தினம் லிபிய அரசு தொலைக்காட்சி, கடாபி தொடர்பான சில காட்சிகளை ஒளிபரப்பியது. அதில், உலக சதுரங்க கூட்டமைப்பின் தலை வரும் ரஷ்யருமான கிர்சன் இலியும் ஷ்னோவ், கடாபியுடன் சதுரங்கம் விளையாடுவது இடம் பெற்றிருந்தது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய கிர்சன், கடாபி, லிபியாவை விட்டு வெளியே போகப் போவதில்லை என்று உறுதியாகத் தெரிவித்தார். எந்தப் பதவியையும் வகிக்காத தன்னை பதவி விலகச் சொல்வது விசித்திரமாக உள்ளதாகவும் அவர் கூறினார் என்றார்.

# போர்விமான இயந்திரங்கள் திருட்டு இஸ்ரேல் இராணுவம் தீவிர விசாரணை

(ஜெருசலேம்)

இஸ்ரேல் விமானப்படைக்கு சொந்தமான விமான இயந்திரங்கள் திருடப்பட்டமை குறித்து அந்நாட்டு இராணுவம் தீவிர விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது. இது குறித்து 'மாரிவ்' என்ற பத்திரிகையில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது: இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் அந்நாட்டு விமானப்படை தலைமையகம் உள்ளது. இங்கு டெல்நௌப் எனும் விமானப்படைத் தளத்திலிருந்த எப்-15-, எப்-16 ரக போர்விமானத்திலிருந்து சுமார் 8 விமான இயந்திரங்கள் திடீரென திருட்டுப் போயின. எனினும் இது குறித்து முழுமையான தகவல்கள் வெளிவரவில்லை. இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், திருட்டுபோன இயந்திரங்கள் ஒவ்வொன்றும் பலஆயிரம் தொன் நிறை கொண்டதாக இருப்பதால் அவற்றை, தேவையற்ற இரும்புக் கழிவுப்பொருட்களை எடுத்துச்செல்லும் கனரக வாகனங்கள் மூலமாகத் திருடி கொண்டு சென்றிருக்கலாம். இது தொடர்பாக இராணுவம் தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது என்றார்.

# லிபிய போராட்டத் தலைமைக்கு அங்கீகாரம் அளித்தது ஜேர்மன்

(பெங்காசி)

லிபியாவில் கேணல் கடாபிக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது. இந்த போராட்டத்தை மேற்கொள்ளும் தலைமையிடமாக பெங்காசி உள்ளது.

இந்த நகருக்கு ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர்வலே திடீர் பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் தமது நாடு போராட்டக்காரர்களின் தலைமையை அங்கீகரிக்கிறது என தெரிவித்தார்.

வெஸ்டர்வலே திங்கட்கிழமை இந்தப் பயணத்தை மேற்கொண்டார். லிபியாவில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படவும், போராட்டக்காரர்களின் தலைமையை அதிகார பூர்வமாக அங்கீகாரம் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

என்.டி.சி என்பபடும் தேசிய மாற்றக் கவுன்சில் லிபியா மக்களின் ஒட்டுமொத்த உரிமையுள்ள பிரதிநிதியாக உள்ளது என்றும் ஜேர்மனி அமைச்சர் தெரிவித்தார்.

லிபியாவை விடுவிக்க விரும்புவதாகவும் மோமர் கடாபி அல்லாத ஆட்சி லிபியாவில் ஏற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். ஜேர்மனி அமைச்சர் வெஸ்டர்வெலேடவுடன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் டிரிக் நபேல் உடன் வந்தார்.


வெஸ்டர்வெலே இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனப் பகுதிகளுக்கு பயணம் செல்லும் வழியில் திடீரென லிபியாவுக்கு வருகை தந்தார். லிபியா தேசிய மாற்றக் கவுன்சில் அமைப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் 13ஆவது நாடாக ஜேர்மனி உள்ளது.

அவுஸ்ரேலியா, பிரிட்டன், பிரான்ஸ், காம்பியா, இத்தாலி, ஜோர்டன், மால்டா, கத்தார், செனகல், ஸ்பெயின், ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஏற்கனவே லிபியா போராட்டக்குழு தலைமைக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

லிபியா போராட்டத்தை நாங்கள் தற்போது ஆதரிக்கிறோம். அங்கு ஆட்சி மாற்ற கவுன்சிலையும் ஆதரிக்கிறோம் என வெஸ்டர்வெலே உறுதி அளித்ததை லிபியா போராட்டக் குழுவின் துணைத்தலைவர் அப்துல் ஹபிஸ் கோகா தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி லிபியா நடவடிக்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையில் வாக்கெடுப்பு நடந்தது. இந்த வாக்கெடுப்பில் ஜேர்மனி பங்கேற்காமல் தவிர்த்தது. அதே போன்று நேட்டோ படைகள் லிபியா இராணுவம் மீதான வான் வழித் தாக்குதல் நடவடிக்கையிலும் பங்கேற்காமல் தவிர்த்தது. ஆனால் தற்போது நிலைப்பாட்டில் ஜேர்மனி மாற்றம் கொண்டுள்ளது

# மனிதனின் மூளையின் அளவு குறைந்து விட்டதாக தகவல்



(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிபுணர் டாக்டர் மார்தா லாகர் தலைமையிலான குழுவினர் மனிதனின் பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அவர்கள் ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியக் கண்டங்களில் வாழும் மனிதர்களின் மண்டை ஓடுகள் மூலம் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

சமீபத்தில் இஸ்ரேலில் உள்ள குகைகளில் இருந்து மனித மண்டை ஓடுகள் கிடைத்தன. அது கடந்த 1 இலட்சம் முதல் 1இலட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குகைமனிதர்களுடையது எனத் தெரிய வந்தது. அவர்கள் நடத்திய ஆய்வின் மூலம் இவர்கள் மிகவும் உயரமாகவும், கட்டுமஸ்தான உடலமைப்புடனும் இருந்தது தெரிய வந்துள்ளது. அதே போன்று அவர்களின் மூளை அளவு பெரிதாக இருந்தது. அவர்களின் உடல் அமைப்பை தற்போது வாழும் மனிதர்களுடன் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 10 ஆயிரம் ஆண்டுக்குள் ஆதிகால மனிதனை விட தற்போதைய மனிதனின் உயரமும், உடல் எடையும் குறைந்துள்ளது.

அதே நேரத்தில் மூளையின் அளவும் 10 சதவீதம் குறைந்து சுருங்கி இருப்பது கண்டுபிடிக்கபட்டுள்ளது. அதற்கு தற்போது உணவு கட்டுப்பாடு மற்றும் சுகாதாரமற்ற சூழ்நிலை, இதைத் தொடர்ந்து ஏற்படும் நோய்களும் காரணம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அதிகரித்த வேலையின்மை

(காசா)

காசாவில் வேலையின்மை நிலை அளவுக்கதிகமாகச் சென்றுவிட்டதாக ஐக்கிய நாடுகள் அறிக்கை தெரிவிக்கிறது.இந்த அறிக்கையின்படி 2010 இரண்டாவது அரையாண்டு கணக்கின்படி 45.2 சதவீதத்தை தொட்டு விட்டதாகவும் இதுவே உலகின் அதிகபட்ச நிலை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களின் கூலி நிர்ணயத்தை விடத் தனியார் துறை கூலிநிர்ணயத்தின் பங்கு குறைவானதே இதற்குக் காரணம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பதிவிறக்கப் பெட்டகம்

எந்தச் சந்தர்ப்பத்தில் மனிதர்கள் தடுமாற ஆரம்பித்தார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு பேரின் சாவு முக்கியத்துவம் இழந்து போனது? எந்தச் சந்தர்ப்பத்தில் நூறு பேரின் சாவு படுகொலையாகத் தெரியாமல் போனது? அதுதான் என்னைக் கஷ்டப்படுத்துகிறது. எப்போது அந்த நிமிடம் வந்துவிட்டதோ, அப்போதே வாழ்வுக்கும், சாவுக்கும் இடைப்பட்ட எல்லை மறைந்துவிட்டதாகத்தான் அர்த்தம். இரண்டுமே இடம் மாறக்கூடியதாக, ஒரே மாதிரியானதாக ஆகி விடும். அதை மட்டும் என்னால் மன்னிக்கவே முடியாது. என்றைக்கு சாவு எதிர்ப்பைத் தெரிவிக்கிற விடயமல்ல என்று முடிவு செய்கிறேனோ, அன்றே நான் வெறும் செத்த பிணமாக வெறும் கூடாகப் போய்விடுவேன் என்பதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

- மார்த்தா த்ராபா (நாவலில்)

நான் தேசப் பற்றில்லாதவன் என்று சொல்வது அறிவுபூர்வமான, தரிசனமான காரணங்களால் அல்ல. தேசபக்தி என்ற பெயரில் சகமனிதர்களைக் கொன்று குவிப்பதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? அறுபது இலட்சம் யூதர்களை ஜேர்மானியர்கள் கொன்று குவித்தார்கள். அது ஜேர்மனியில்தானே என்று சிலர் கேட்கிறார்கள். இருக்கலாம். ஆனால் இனவதையென்னும் இருட்டறைகள் எல்லா தேச உடம்புகளிலும் உறங்கிக் கிடக்கின்றன....

நான் வாழ்ந்த காலம் முழுவதும் நீங்களும் வாழ்ந்து பார்த்தால் உங்களுக்கும் புரியும், எல்லா அரசியலும் முட்டாள்தனமானது, சிறுபிள்ளைத்தனமானது.

- சார்ளி சப்ளின் (பத்திரிகை அறிக்கையில்)

தற்போது பயங்கரவாதம் மட்டுமல்ல, போரும் ஒடுக்குமுறையும்கூட மீடியா இன்றி சாத்தியமில்லை எனும் காலத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறோம். 1991இல் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது அது அமெரிக்கத் தொலைக்காட்சிகளின் prime timeஇல் துவங்கப்பட்டது. ஒரு கிரிக்கெட் போட்டியைக் காட்ட தொலைக்காட்சிக் கம்பனிகள் முழு உரிமை பெறுவது போல ஈராக் போருக்கு சி.என்.என். உரிமை பெற்று உலகெங்கும் பட்டிதொட்டியெல்லாம் நுழைந்தது. அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதலை ஒட்டியும் அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் நடந்த போரை அடுத்தும் ஃபொக்ஸ் நியூஸ், அல் ஜஸீரா போன்ற தொலைக்காட்சி கம்பனிகள் உலகளாவிய விரிவு பெற்றுள்ளன. எப்படி மீடியா இல்லாமல் பயங்கரவாதம் சாத்தியமில்லையோ அதுபோல் பயங்கரவாதமும் வன்முறையும் போரும் ஒடுக்குமுறையும் காட்சிப் படுத்தப்படாமல் மீடியாவின் வளர்ச்சியும் சாத்தியமில்லை. பயங்கரவாதமும் ஒடுக்குமுறையும் வன்முறையும் மீடியாவின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. மீடியாவின் இருப்பு இவற்றை உக்கிரப்படுத்துகிறது.

- காலச்சுவடு கண்ணன்.

உலகத்தில் முளைக்கும் எல்லாச் சச்சரவுகளுக்கும், பகைக்கும் மூலகாரணம் ஒரு குழுவினர் மற்றொரு குழுவினரைவிடத் தாம் மேம்பட்டவர் என்று நினைப்பதுதான்.

- அமார்த்தியா சென்.

காபிக் கோப்பை மீது உட்கார வந்த ஒரு ஈயைச் சட்டென்று விரட்டினான். அரைக் கோப்பை அளவு மிஞ்சியிருந்த காபி மீது லேசாக ஏடு பரவ ஆரம்பித்திருந்தது. இந்த காபியைத்தான் குடிக்கப் போவதில்லையே, ஏன் ஈயை விரட்டினோம் என்று அவனுக்குத் தோன்றியது. ஓர் ஈ எத்தனை நாட்கள் உயிர் வாழ்ந்திருக்கும்? பத்து நாட்கள்? இருபது நாட்கள்? ஒரு மாதம்? அந்தக் குறுகிய கால வாழ்க்கையில் ஒரு கணம், அதன் ஒரு வாய் உணவு, பெரும்பங்கைத்தான் வகிக்க வேண்டும். அவனால் இப்போது சாக்கடையில் கொட்டப்பட இருக்கும் அந்த காபி எத்தனை ஜீவ ராசிகளின் முழு ஜீவித ஆதாரமாக இருக்கக்கூடும்? எவ்வளவு எளிதில் சிருஷ்டி தர்மத்தை, ஓருயிர் தான் வாழ வேண்டும் என்று மேற்கொள்ளும் இயக்கத்தை, தன்னால் ஒரு சலனம் கூட இல்லாமல் புறக்கணிக்க முடிகிறது, துஷ்பிரயோகம் செய்ய முடிகிறது? மனிதனுக்கும் மனிதனுக்கும்கூட இப்படித் தானோ? காந்தி இதற்குத்தான் மீண்டும் மீண்டும் தான் ஆங்கிலேயரை வெறுக்கவில்லை, ஆங்கிலேயரைத் துவேஷிக்கவில்லை என்று கூறிக் கொண்டாரோ?

-அசோகமித்திரன் 'காந்தி' சிறுகதையில்.

உங்களுக்கு உரியது உங்களுக்குத் தரப்படாவிட்டால், உங்களுக்கு உரியதையும் கொடுத்து விடுவதுதான் உயர்ந்த எதிர்ப்பு.

- காந்தி.

# அலைபுரளும் கடலின் முன்னே தன்னந்தனியாக நிற்கிறோம்...

பிரேம்சந்தின் ஒரு இந்திக் கதை 'லட்டு' என்று பெயர். கதாநாயகிக்கு தொண்ணூறு வயது. திரும்பவும் குழந்தை ஆகிவிட்டாள். நடக்க முடியாது, தவழ்வாள். பொக்கை வாயில் மழலைச் சொல்தான் பேசுவாள். காது சரியாகக் கேட்காது. பெரும்பாலும் சிரிப்புதான் அவள் மொழி.

வீட்டில் அவள் மகனும், மருமகளும், பேரப்பிள்ளைகளும் உள்ளனர். மருமகளுக்கு இந்தக் குழந்தையைப் பராமரித்து அலுத்துவிட்டது. கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். சாப்பாடு ஊட்டிவிட வேண்டும். மலசலம் கழிக்கக் கொண்டுபோக வேண்டும். படுக்கவைத்து போர்த்திவிட வேண்டும். கொஞ்சம் கண்ணசந்தால் எங்காவது போய்விடும். விழுந்து அடிபட்டு வந்துசேரும். எதையாவது எடுத்து வாயில் போட்டுக் கொள்ளும். இது செத்து ஒழிந்தால் தான் எனக்கு வாழ்க்கை என்று வைகிறாள் மருமகள்.

பேத்திக்குக் கல்யாணப்பேச்சு அடிபடுகிறது. கல்யாணம் என்ற சொல் எப்படியோ காதில் விழுந்ததும் கிழத்துக்கு லட்டு நினைவு வந்துவிட்டது. அதன் கல்யாணத் தன்றைக்கு தேங்காயளவுக்கு லட்டு செய்தார்கள். "லட்டு வேண்டும் லட்டு" என்று கிழவி முனக ஆரம்பித்தாள். "எப்போது கல்யாணம், கல்யாணத்துக்கு லட்டு உண்டா?" என்று வாய் ஓயாமல் நச்சரிக்க ஆரம்பித்தாள்.

"சும்மாகிட. உனக்கு இந்தவயசில் லட்டு ஒரு கேடா" என்றாள் மருமகள். திட்டெல்லாம் கிழத்துக்கு பொருட்டே அல்ல. லட்டு லட்டு என ஒரே ஜபம். வேறு நினைப்பே இல்லை. "கல்யாணத்துக்கு லட்டு செய்வேன். உனக்கு ஒரு கூடை லட்டு தருவேன் தின்றுவிட்டு செத்துத்தொலை என்ன?" என்கிறாள் மருமகள்.

கல்யாணம் நெருங்குகிறது. ஊரையே அழைத்துவிட்டார்கள். ஆயிரம் லட்டுத் தேவை. கொல்லைப்பக்கம் அடுப்புமூட்டி லட்டு செய்கிறாள் மருமகள். கைவலிக்க லட்டு உருட்டுகிறாள். மூன்றுநாள் லட்டு செய்யும் வேலை. நடுவே கிழவி லட்டு வெறியேறி அலைகிறாள். எங்காவது அடுப்பில் விழுந்துவிடப் போகிறது என்று மருமகள் அவளை அறையிலேயே வைத்திருக்கிறாள். கல்யாணம் முடிந்தபின் உனக்கு லட்டு தருவேன் என்கிறாள்.

கல்யாணம். விருந்தினர்கள் வந்தபடியே இருக்கிறார்கள். கிழவி நடுவே லட்டு லட்டு என்று தவழ்கிறாள். யாரோ சிரிக்கிறார்கள். மருமகளுக்கு அவமானமாக இருக்கிறது. கிழவியை இழுத்துச் சென்று ஒரு அறையில்போட்டு பெரிய பூட்டால் பூட்டிவிடுகிறாள். லட்டு லட்டு என்கிறாள் கிழவி. "கல்யாணம் முடிந்தபின் உனக்கு லட்டுமலையே இருக்கிறது சும்மா கிட" என்கிறாள் மருமகள்.

கல்யாணத்தில் பயங்கரமான கூட்டம். சாப்பாடும் பலகாரங்களும் போதவில்லை. உபசரித்து முதுகு ஒடிகிறது. களைத்துச் சோர்ந்து எழ முடியாமல் மருமகள் உட்கார்ந்துவிடுகிறாள். வந்தவர்கள் எல்லாரும் போய்விடுகிறார்கள். மீச்சப்பேர் தூங்கிவிட்டார்கள். வீடே சூனியமாக கிடக்கிறது. எங்காவது அப்படியே விழுந்து தூங்கினால் போதும் என்றிருக்கிறது.

யாரோ கதவைத் திறந்துவிட்டார்கள். கிழவி ஆவேசமாக தவழ்ந்து சென்று பந்தி போட்ட இடத்தில் சிதறிக்கிடந்த லட்டுத்துளிகளை பொறுக்கிச்சேர்க்கிறாள். "லட்டுலட்டு" என மகிழ்ச்சிப்பரவசத்துடன் சொல்லியபடியே தின்கிறாள். மருமகள் தற்செயலாக அப்படி வந்தவள் அதைக் காண்கிறாள். கிழவியின் முகத்தில் குழந்தையின் தூய சிரிப்பு. "லட்டு பார்த்தாயா? நிறைய இருக்கிறது"

அப்படியே அலறியபடி கிழவி காலில் விழுகிறாள் மருமகள். "என் தாயே உனக்கு ஒரு லட்டு கொடுக்கத தோன்றவில்லையே!" என்று கதறுகிறாள். நள்ளிரவில் அடுப்பு மூட்டி லட்டுசெய்ய ஆரம்பிக்கிறாள்.

நண்பர்களே, மகத்தான ஏதோ ஒன்று பேரிலக்கியங்களில் உள்ளது. அது மனிதாபிமானமா அன்பா என்ன என்று நான் சொல்ல விரும்பவில்லை. மனிதன் தன் வாழ்க்கையின் சாரமாக மீண்டும் மீண்டும் கண்டடையும் ஒன்று.



நம்மைக் கண்ணீர் விடவைக்கும் ஒன்று. அதைக் காணும்போது மனிதமனம் ஆனந்தம் நிறைந்து ததும்புகிறது. அந்த ஆனந்தமே இலக்கியத்தின் மையம்.

சார்த்ர் எழுதிய 'சுவர்' என்ற சிறுகதையை நினைவுகூர்கிறேன். லத்தீன் அமெரிக்க நாடு ஒன்றில் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் போராடுகின்றன புரட்சிக்குழுக்கள். அக்குழு ஒன்றின் அதிதீவிர உறுப்பினராகிய கதாநாயகன் தற்செயலாக கைதுசெய்யப்படுகிறான். அவனைச் சித்திரவதைக் கூடத்துக்குக் கொண்டு வருகிறார்கள். தலைவர் எங்கே ஒளிந்திருக்கிறார் என்று கேட்டு அவனையும் மேலும் பத்துபேரையும் கடுமையாகச் சித்திரவதை செய்கிறார்கள்.

அந்தக் கூட்டத்தில் அவன் ஒருவனுக்கு மட்டுமே தலைவனைப் பற்றி தெரியும். அவர் மலைமீது பழங்குடிக் குடியிருப்பில் இருக்கிறார். அவனுடன் உள்ள ஒவ்வொருவராக கொல்லப் படுகிறார்கள். கடுமையான சித்திர வதையிலும் மரண பயத்திலும் அவன் தன்நிலையை இழக்கவில்லை. மெல்ல ஆட்சியாளர்களுக்கு தெரிகிறது, அவனுக்கு தெரியும் என.

சித்திரவதைக் குழுத்தலைவன் மேஜர் வருகிறான். அவனிடம் சொல்கிறான், "உன் தலைவனை காட்டிக் கொடுத்தால் உனக்கு விடுதலை. நான் தனிப்பட்ட முறையில் உறுதி அளிக்கிறேன்." வரிசையாக நிற்க வைத்து ஒவ்வொருவராக கொலைத் தண்டனைக்கு இட்டுச்செல்லப்படுகிறார்கள். அவன் முன் நின்றவன் தன்னிச்சையாகவே கால்சட்டையில் சிறுநீர் பெய்கிறான். பித்தன் போல் புலம்பி அழுகிறான். தன்னை விடுவிக்கும் பொருட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அது இன்னமும் வந்துசேரவில்லை என்றும் சொல்லி அழுகிறான்.

சட்டென்று அவனுக்கு ஓர் எண்ணம் உதிக்கிறது. கொலைத் தண்டனையை சற்று தாமதிக்க வைத்தால் ஒருவேளை அக்கைதி தப்பக்கூடும். ஒரு திட்டம் வகுக்கிறான். மேஜரை அழைத்து தன் தலைவன் கீழே நகரத்துச் சேரியில் ஏதோ ஒரு வீட்டில் இருப்பதாகச் சொல்கிறான். நகரச் சேரி மிகப்பெரிது. அதை அவர்கள் தேடி முடிக்க. இரவும் பகலும் ஆகிவிடும். அதற்குள் ஒருவேளை ஒருவன் மரணத்திலிருந்து தப்ப உத்தரவு வரமுடியும்.

அவனை ஓர் அறையில் போட்டு மூடுகிறார்கள். "உனக்கு இது ஒரு வாய்ப்பு. உன் தலைவன் பிடிபட்டால் உனக்கு விடுதலை. நீ ஏமாற்றினாயென்றால் கடுமையான சித்திரவதை காத்திருக்கிறது" என்று சொல்கிறார்கள். அவன் தனக்குள் சிரிக்கிறான்.

ஆனால் மறுநாள் காலையிலேயே அவனது அறைக்கதவு திறக்கப்படுகிறது. மேஜர் கசப்புடன் சிரித்தபடி சொல்கிறான் "நீ தைரியசாலி என்றும் விசுவாசமானவன் என்றும் நினைத்தேன். ஆகவே நீ என்னை ஏமாற்றுகிறாய் என்று தோன்றியது. இருந்தாலும் தேடிச்சென்றோம். உன் தலைவன் பிடிபட்டுவிட்டான். உனக்கு விடுதலை"

ஆம், தலைவர் இரகசியமாக அன்று முன்னிரவில்தான் சேரிக்கு வந்திருக்கிறார்! அவன் அதிர்ந்து வாயடைத்து நிற்கிறான். அவனை அவர்கள் விடுதலை செய்கிறார்கள். மேஜர் வெறுப்புடன் சொல்கிறான் "நீ ஒரு கோழை! துரோகி! நான் உன்னை வெறுக்கிறேன். ஓடிப்போ"

அவன் சட்டென்று சிரிக்க ஆரம்பிக்கிறான். சிரித்தபடியே இருக்கிறான். விலா வலிக்க சிரிக்கிறான். கண்ணீர் கொட்டி சீறி அழ ஆரம்பிப்பதுவரை சிரிக்கிறான்.

நண்பர்களே, இந்தச் சிரிப்பை நாம் முன்னரே சொன்ன அழுகையுடன் ஒப்பிடவேண்டும். அந்த அழுகைக்கு நேர் எதிரானதல்லவா இந்தச் சிரிப்பு? மானுட வாழ்க்கை என்ற வெங்காயத்தை தோல் உரித்து பார்த்து சாராம்சமாக ஒன்றுமே இல்லை என்றறிந்தபின் வரும் சிரிப்பு இது. அத்தனை இலட்சியங்கள், மன மயக்கங்கள் அனைத்துக்குள் உள்ளே உறையும் அபத்தத்தை கண்டடைந்த பின் வரும் சிரிப்பு இது. அவன் செய்த தியாகம் அவனது வீரம் அவனது அர்ப்பணிப்பு எதற்குமே பொருள் இல்லை. இனி அவன் எங்கும் எப்போதும் துரோகிதான்!

ஓ.வி.விஜயனின் புகழ்பெற்ற சிறுகதை "கடல்கரையில்".

வெள்ளாயியப்பன் தன் சிற்றூரிலிருந்து அதிகாலையிலேயே கால்நடையாகக் கிளம்புகிறான். கையில் வழியில் சாப்பிட ஒரு பொட்டலம் சோறு அவன் மனைவியால் கட்டி கொடுக்கப்படுகிறது.

கண்ணீர் கனத்த முகத்துடன் நிற்கும் மனைவியிடம் அவன் விடைபெறுகிறான். நடக்கிறான். வழியில் எதிர்ப்பட்ட ஊரார் அவனிடம் துயரத்துடன் நகரத்திற்கா செல்கிறாய் என்கிறார்கள். ஆமாம் கூட்டாளிகளே நான் சென்றுவருகிறேன் எனக்கு விடை கொடுங்கள் என்கிறான்.

ஊரின் மரங்களும் பாறைகளும் சிற்றோடைகளும் அவனிடம் துயரமாக கேட்கின்றன. நகரத்திற்கா செல்கிறாய்? ஆமாம் எனக்கு விடை கொடுங்கள் என்று சொல்கிறான்.

நீண்ட செம்மண் பாதை வழியாக அவன் நடக்கிறான். கால்களில் புழுதிபடிகிறது. உடல் வியர்த்துக் களைக்கிறது. அந்தச் சோற்று பொட்டலம் கனக்கிறது. வெயிலில் தும்பிகளும் சிறுபறவைகளும் நீந்திக் களிக்கின்றன. கவலையே அறியாத வானம் ஒளியுடன் கண்நிறைத்து விரிந்திருக்கிறது. வெள்ளாயியப்பன் அதைக் கண்டு மனம் உருகிக் கண்ணீர் விடுகிறான்.

மாலை வெள்ளாயியப்பன் நகரத்தை அடைகிறான். நகர் நடுவே ஒரு கோட்டை. அதற்குள் ஒரு சிறை. சிறை வாசலில் பொட்டலத்துடன் அவன் காத்து நிற்கிறான். காவலர் அவனை அனுதாபமாகப் பார்க்கிறார்கள். அவன் மேலும் மேலும் பல வாசல்களில் நிற்கவேண்டியுள்ளது.

கடைசியில் அவன் தன் ஒரே மகனை இரும்புக்கம்பிகளுக்கு அப்பால் காண்கிறான். அவன் வெளுத்துப்போய் நடுங்கிக்கொண்டே இருக்கிறான். "அப்பா நீ வந்தாயா?" என்கிறான். "மகனே நான் வரவேண்டுமல்லவா?" என்கிறான் வெள்ளாயியப்பன்.

"இனி நான் இருக்கமாட்டேனே அப்பா... அம்மாவை இனி என்னால் பார்க்க முடியாதே" என்கிறான் மகன். "மகனே நீ தவறு செய்தாய் என்றல்லவா அவர்கள் சொல்கிறார்கள்?" என்கிறான் வெள்ளாயியப்பன்.

"நான் எந்த தவறும் செய்யவில்லை அப்பா" மகன் சொன்னான். "அதை அவர்கள்தானே தீர்மானிக்கிறார்கள்?" என்கிறான் வெள்ளாயியப்பன். அந்தச் சோற்றை மகனுக்குக் கொடுக்கிறான். அவன் வேண்டாம் என மறுத்துவிடுகிறான்.

அன்றிரவு முழுக்க வெள்ளாயியப்பன் தூங்காமல் சிறை வாசலில் அமர்ந்திருந்தான். வானம் இருண்டது. நட்சத்திரங்கள் ஆழம் காண முடியாத இருளில் மின்னிக் கொண்டிருந்தன.

**ஜெயமோகன்**

மறுநாள் அதிகாலையில் அவன் மகன் தூக்கில் இடப்பட்டான். அதை அவன் பார்க்கவில்லை. "உன் மகனின் சடலத்தை நீ பெற்றுக் கொள்ளலாம்" என்கிறார் சிறையதிகாரி. "இல்லை எஜமானே. ஊருக்குக் கொண்டுபோக எனக்கு வசதி இல்லை" என்கிறான் வெள்ளாயியப்பன் "நீங்களே அடக்கம் செய்யுங்கள்"

விடிய ஆரம்பிக்கிறது. சோற்றுப் பொட்டலத்துடன் வெள்ளாயியப்பன் கடற்கரைக்குச் செல்கிறான். வெண்நீலப்பட்டு விதானம் போல வானம் காலை ஒளிகொண்டிருக்கிறது. அலை ஓயாத அமைதியில்லாத கடல் தொலைவில்.

வெள்ளாயியப்பன் மகனை எண்ணினான். அவனுக்குக் கண்ணீர் வரவில்லை. என் மூதாதையருடன் நலமாக இரு மகனே என்று எண்ணிக் கொண்டான். அந்தச் சோற்றுப் பொட்டலத்தை கடற் கரையில் வீசினான். ஒளிமிக்க வானிலிருந்து காக்கைகள் வடிவில் மூதாதையர் கூட்டம் கூட்டமாக இறங்கிவந்தனர் அந்த பலிச்சோற்றை உண்ண.

நண்பர்களே, இந்தக்கதை ஒரு இந்திய இருத்தலியல் கதை. அரசு, தர்மநியாயங்கள் எல்லாமே தனிமனிதனை மீறி அவனை பந்தாடுவதை இது காட்டுகிறது. இக்கதையிலும் தனிமனிதன் தன் விதியுடன் அகண்ட காலத்தின் முன் தன்னந்தனியாக நிற்கிறான். அந்தக்கடல்தான் அலை புரளும் முடிவிலியாகிய காலம், இல்லையா?

# துரிதமாகிறது வடக்கின் வசந்தம்

## யாழில் மின்சாரக்கட்டுமானம் விஸ்தரிப்பு

(ஊர்காவற்துறை)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மின் இணைப்பு வேலைகள் மிகத் துரித கதியில் நிறைவேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப பட்டுவருகிறது.

இதுவரை இத்திட்டத்தினை விரைவாக நடைமுறைப் படுத்துவதில் இருந்த தாமதங்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளமையால் மிகத் துரித கதியில் வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இத்திட்டத்தின் திட்ட முகாமையாளர் T.குணசீலன் தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தும் முகமாக வடமாகாணத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலைத் திட்டங்களுக்கான பிரத்தியேக பணிமனை ஒன்றும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டப் பணிமனை இதுவரை காலமும் வவுனியாவில் இயங்கிவந்தது. எதிர் வரும் காலங்களில் மக்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டு யாழ்.மாவட்டத்தில் இதற்கான அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக வடக்கின் வசந்தம் திட்டமுகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி பணிமனை யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பணிமனை இவ்வாரம் முதல் செயற்பட ஆரம்பிக்கும் எனவும் இவ் வடக்கின் வசந்த திட்டத்திற்குரிய மின் பொறியியலாளர்கள் மின் அத்தியட்சகர்கள் இவ் அலுவலகத்தில் கடமையில் இருப்பார்கள் எனவும் எவ்வேளையிலும் மக்கள் தொடர்புகொண்டு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட தெல்லிப்பளை, சாவகச்சேரி, புங்குடு தீவு, ஊர்காவற்துறை, மண்டை தீவு பிரதேசங்களில் இவ வேலைத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், மிகவிரைவில் மேற்படி பிரதேச மின்சாரக் கட்டுமானங்கள் அனைத்தும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையினைத் தாம் தற்போது மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (27)

# எழுதுமட்டுவாளில் வாழ்வாதாரத் திட்டம்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள வடக்கு ஜே/ 334 கிராம அலுவலர் பிரிவில் வாழ்வாதார உதவித்திட்டத்திற்கென மக்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.45 மணியளவில் கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற்றது.

கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யு.என்.டி.பி. கபிராட் நிறுவன திட்ட உதவியாளர், கிராம அபிவிருத்தி அலுவலர், சமூக வலுவூட்டல் அலுவலர் மற்றும் கொடிகாமம் பிரதேச ஈ.பி.டி.பி. கட்சியின் அமைப்பாளர் விஸ்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு ஆகக்கூடிய தொகை 65 ஆயிரம் ரூபா வழங்கப்படும் அத்துடன் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் இறைக்கப்பட்டால் நீர் வீண்விரயமாக்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசனம், தூவல் நீர்ப்பாசனம் போன்ற நீர்ப்பாசன முறைகளை விவசாயிகள் பயன்படுத்தினால் நீர் வீண்விரயமாக்கப்படுவதைத் தவிர்க்கலாம் என யு.என்.டி.பி. கபிராட் திட்ட உதவியாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது.

இதைவிட கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் முட்டை உற்பத்தியைவிட கோழிக்குஞ்சு உற்பத்தியில் ஈடுபட்டால் அதிகளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பயனாளிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. கால்நடை உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக 5 நாட்கள் கொண்ட குறுகியகால பயிற்சி நெறி வழங்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (19)

# மாகாண மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாணத்தில் இருந்து ஐந்து மாவட்டங்களினதும் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதன்போது சுமார் 50 வரையான போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. (52)

# அரச வாகனங்களின் பயன்பாடு தேர்தல் காலத்தில் கண்காணிக்க ஏற்பாடு

தேர்தல் காலங்களில் அரச வாகனங்களை பயன்படுத்துவது தொடர்பில் கண்காணிப்பதற்கு விசேட அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு, அனைத்து அரச நிறுவன பிரதானிகளுக்கும், தேர்தல் ஆணையாளரால் பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சுக்களில் இவ்வாறான அதிகாரிகளை நியமிக்கும்போது, அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் அல்லது அதற்கு ஈடான பதவி உடைய ஒருவரை நியமிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் அரச வாகனங்கள் பயன்படுத்ணதப்படுவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாந்தை கிழக்கில் சிறுபோக நெற்செய்கை

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் இவ்வாண்டு மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் குறிப்பாகக் குளத்தின் இடதுகரை, வலதுகரை, மத்திய துரிசு ஆகிய நீர்ப்பாசன வாய்க்கால்களின் கீழ் இரண்டாயிரத்து நூறு ஏக்கர் நில்ப்பரப்பில் இச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைவிட இப்பிரதேசத்திலுள்ள ஏனைய நடுத்தரக் குளங்களின் கீழ் தொள்ளாயிரம் ஏக்கர் வரை செய்கை மேற்கொள்ளப் படுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

# மீனவர்கள் நாடு திரும்பினர்

சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் பணயக் கைதிகளாக பிடித்துச்செல்லப்பட்ட மீனவர்களுள் 4 இலங்கை மீனவர்கள் நேற்று முற்பகல் நாடுதிரும்பியுள்ளனர். கடந்த வருடம் நவம்பர் மாதமளவில் களுத்துறை பிரதேசத்திலிருந்து கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற குறித்த மீனவர்கள் 3 ஆம் திகதி யளவில் பிடிததுச் செல்லப்பட்டுள் ளனர் இவர்கள் கடந்த மாதம் 11ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக கப்பட்டிருந்த 10 இலங்கை மீனவர்கள் நேற்று முன்தினம் நாடுதிரும்பியுள்ளனர்.

# மார்பகப் புற்றுநோய் கண்டுபிடிக்க புதிய கருவி

(கொழும்பு)

பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயை கண்டுபிடிக்க அதிநவீன கருவியை ரஷ்ய - இந்திய தொழில்நுட்ப நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அலகாபாத் நகரில் உள்ள இந்திய இன்ஸ்ட்டி டியூட் ஆப் இன்பர்மேஷன டெக்னாலஜி என்ற நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் ரஷ்யாவின் ரேடியோ இன்ஜினியரிங் நிறுவனத்துடன் இணைந்து இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கருவியில் பல நவீன பயன்கள் உள்ளன. இதில் உள்ள சென்சார் மூலம் எந்தப்பாதிப்பும் ஏற்படாது. சோதனை செய்தபின் உடனுக்குடன் துல்லியமான தகவல்கள் கிடைக்கும். சோதனை முடிந்த 50 நொடிகளில் பெறுபேறு கிடைத்துவிடும் என்று அல காபாத் தகவல் தொழில்நுட்ப நிறுவன இயக்குனர் திவாரி தெரிவிக்கின்றார்.

## அதிபர் நியமனம்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய அதிபராக வேலாயுதம் சக்திவேல் கடந்த 7 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டுள்ளார். குறித்த பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய ந.சிவகடாட்சம் மானிப்பாய் மெமோறி யல் ஆங்கிலப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய வே.சக்திவேல் அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (104)

## அரசுடன் இணங்கிச்...

அரசாங்கத்தின் ஒருசில கொள்கைகளை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்ற வகையில் அவற்றுக்கு எதிரானவன்.

அரசாங்கத்துக்கு ஆதரவளித்துச் செயற்படுதல் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுச் செயற்படுதல் ஆகிய விடயங்கள் இரண்டும் வெவ்வேறானவை. ஒன்றுக்கொன்று மாறுபட்ட வையும்கூட. தமிழ் மக்களின் அபிவிருத்திக்காக அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க நான் என்றும் தயாராகவே இருக்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெட்டிய பனை...

சபை அனுமதி வழங்கிவருகிறது. ஆனால் இதற்கு மேலதிகமாக மரக்காலைகளில் எவ்வித அனுமதியும் இன்றி பனை மரங்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதி இன்றி பனை மரங்கள் தறிக்கப்படுவதும் விற்பனை செய்யப்படுவதும் 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ள மரங்களைத் தறித்தல் கட்டுப்பாட்டுத் திருத்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே இனிவரும் காலங்களில் அனுமதி பெறப்படாத பனை மரங்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அம் மரக்காலை உரிமையாளர்களின் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

## துள்ளித்திரியும்...

கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இதற்கு குடும்பத்தின் வறுமைநிலை, நோய்த் தாக்கம், அங்கவீனம் போன்றவை காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் சிறுவர்கள் துஷ்பிரயோகம், பெண்க ளுக்கெதிரான வன்முறைகளும் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர் இவற்றைக் கட்டுப்படுத்த அனைவரினதும் பங்களிப்புடனான நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தினார். (பா)

## புலிகளின் நிதி...

ஒபரேசன் கொனிங் என்கிற பெயரில் அதிரடி நடவடிக்கை ஒன்றை ஏற்கனவே ஆரம்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்தில் 38 பேர் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என அடையாளம் கண்டு உள்ளதாகவும், நெதர்லாந்தில் புலிகளின் நிதிச் செயல்பாடுகள் தொடர்பாக ஏராளமான ஆவணங்கள், ஆதாரங்கள் சோதனை நடவடிக்கைகளின்போது இப்புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப் பெறறுள்ளன என்றும் நெதர்லாந்து ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த ஆதாரங்கள், ஆவணங்கள் அடிப்படையில் நெதர்லாந்து நாட்டு நீதிபதிகள் குழு வழக்கு நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. எனவே, இக்குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இருந்த குமரன் பத்மநாதன் உட்பட முன்னாள் புலி முக்கியஸ்தர்கள் 13 பேரை இலங்கையில் விசாரிக்கின்றமைக்காகவே இலங்கை வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதே போன்று இக்குழுவினர் அமெரிக்கா சென்று விசாரணை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளனர். புலிகள் இயக்கத்துக்காக அமெரிக்காவில் ஆயுதக்கொளவனவில் ஈடுபட்டார் என்கிற வழககில் குற்றத்தை ஒப்புக்கொண்டு இருக்கும் பிரதீபன் என்பவரிடம் விசாரணை நடத்துவதற்கும் உத்தேசித்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விசேட கண்சிகிச்சை...


பார்வைக்கான சிகிச்சை நிலையம் திறந்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர பி.ஜி.மகிபாலவினால் இச் சிகிச்சை நிலையம் நாடா வெட்டித் திறந்துவைக்கப பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா மற்றும் துறைசார் வைத்தியர்களும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் வைத்தியர் சமன் சேனநாயக்காவினால் குறைந்த பார்வையாளர்களுக்கான சிகிச்சை மற்றும் தரவுகள் உள்ளடங்கிய ஒளிப்படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது.(பா)

## இந்திய நிபுணர்குழு...

வடக்குக் கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை அளித்து சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தவென அடுத்த வாரம் சேவா - இந்திய நிறுவனப் பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள்ளனர். இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவென 50 இளைஞர் யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு இந்தியாவில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில பயிற்சி வழங்கப்பட்டு அதன்பின்னர் அவர்கள் ஊடாக விதவைப் பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.



# யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை என்ன? பிரித்தானிய தூதுக் குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவின் இலங்கைக்கான உதவி உயர்ஸ்தானிகர் மார்க் கூடிங் மற்றும் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைமை அதிகாரி டேவிட் பேகன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதிக் குழுக்களின் தலைவருமான மு.சந்திரகுமாரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள "எக்ஸ்போ" விடுதியில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், யுத்தத்திற்கு பின்பு வட பகுதியின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் குறிப்பாக மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களைப் பற்றியும் பேசப்பட்டதோடு புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையானவர்கள் சமூகத்துடன் ஒருங்கிணைந்துள்ளமை மற்றும் அவர்களுடைய வாழ்வாதார மேம்பாடு ஆகியன குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



மேலும் மீள்குடியேற்றம், மீள் குடியேறிய பிரதேசங்களின் அபிவிருத்தி, மக்களின் வாழ்வாதார மேம்பாடு என்பவற்றுக்கு பிரிட்டிஷ் அரசினுடைய உதவிகளின் அவசியம் பற்றி பிரித்தானிய உதவி உயர் ஸ்தானிகருக்கு எடுத்துக்கூறப்பட்டதோடு யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் அபிவிருத்திக்கு பிரிட்டிஷ் அரசு தொடர்ந்தும் உதவிகளை வழங்கவேண்டும் எனவும் நாடாளுமன்ற பிரதிக்குழுக்களின் தலைவர் சந்திரகுமார் கேட்டுக் கொண்டார்.

இந்தச்சந்திப்பில் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பு அலுவலர் ராஜ்குமார், பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவுத்தலைமை அதிகாரி டேவிட் பேகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# யாழில் பனை அபிவிருத்தி; தயாராகிறது புதிய திட்டங்கள்

(ஊர்காவற்துறை)

யாழ். மாவட்டத்தில் பனைசார் அபிவிருத்திகளைத் திட்டமிடுவதற்கான நடவடிக்கைகளில் பனை அபிவிருத்திச் சபை இறங்கியுள்ளது.

மேற்படி திட்டத்தினை மேற்கொள்வதற்காக யாழ்.மாவட்ட பனைசார் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய உற்பத்திகள் தொடர்பான புள்ளிவிபரம் திரட்டப்படுகின்றன.

மேலும் பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' நிலையங்களூடாகவும் புள்ளிவிபரத்துக்கான தகவல்கள் சேகரிக்கப்படு பனைசார் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தகவல்கள் மூலம் யாழ். மாவட்டத்தில் அருகிவரும் பனைசார் உற்பத்தி முயற்சிகளுக்கு புத்துயிர் அளிப்பதுடன், எதிர்கால சந்ததியினருக்கு இப்பனை வளத்தை பாதுகாப்பாக ஒப்படைக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.(27)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும், யா/இணுவில் இந்துக் கல்லூரிக்கும் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மற்றும் யா/இணுவில் இந்துக் கல்லூரிக்கு இலங்கை அதிபர் சே.. தரம் I, 2 - I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 24 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# யாழ். திறந்த பல்கலையில் புதிய பாடநெறிகள் ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் தொழில்நுட்பவியல் இளமாணி, தொழில்நுட்பவியல் டிப்ளோமா மற்றும் அத்திவார மட்டப் பாடநெறிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

எந்திரவியல் தொழில்நுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் டபிள்யூ.ஏ.விமலவீர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், ஈ.பி.டி.பியின் நல்லூர் அமைப்பாளர் ஏ.ரவீந்திரதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

# கல்விப் பணிப்பாளருக்கு இன்று மணி விழா

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் மணிவிழா நிகழ்வு இன்று முற்பகல் 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி அதிபரும் மணி விழாக் குழுத் தலைவருமான வீ.கணேசராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மற்றும் மௌலவி எம்.எச்.அப்துல் அசீஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து வாழ்த்துரைகளை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் மற்றும் வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி.செல்வரட்ணம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் மற்றும் தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரட்ணம் உள்ளிட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# லங்கா சீமெந்து ஊழியர்களுக்கு பணிக்கொடை இன்று கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவனத்தில் பணியாற்றியோருக்கான பணிக்கொடை வழங்கல் நிகழ்வு நாளை மாலை 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய 57 பேருக்கான பணிக்கொடையினை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கவுள்ளார்.

இப்பணிக்கொடையினை பெறவுள்ள சீமெந்து நிறுவனப் பணியாளர்கள் நாளை பிற்பகல் ஒரு மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தின் 4 ஆம் மாடியில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்திற்கு கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி மற்றும் 50 ரூபா பெறுதியான முத்திரை ஒன்றையும் கொண்டுவருமாறு உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வேண்டாம் கப்பல் போக்குவரத்து பிரதமரிடம் ஜெயலலிதா கோரிக்கை

(கொழும்பு)

தமிழகத்தின் தூத்துக்குடிக்கும் இலங்கைத் தலைநகர் கொழும்புக்கும் இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்துத் திட்டத்தை இடைநிறுத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தத் திட்டமானது தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் கடந்த திங்கட்கிழமையன்றுதான் இத் திட்டம் தூத்துக்குடியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. துவக்க விழாவில் மாநில அரசு அதிகாரிகளும், அ.தி.மு.க எம்.எல்.ஏ.வும் கலந்து கொள்ளவில்லை.

தூத்துக்குடியிலிருந்து திங்கள் மாலை புறப்பட்ட கப்பல் செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பு சென்றடைந்துள்ளது.

அதேபோல இலங்கையில் மீள் குடியேற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நேரில் கண்டறிய தமிழக சட்டமன்ற உறுப்பினர் குழுவை அங்கு அனுப்ப வேண்டும் என்றும் முதல்வர் கோரியுள்ளார்.

# ஆதன மதிப்பீடு உடுவிலில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு உடுவில் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆதன மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட மதிப்பீட்டாளர் எஸ்.ஜெகநாதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது -

ஆதன மதிப்பீட்டின் முதலாம் கட்டப் பணிகள் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் பணிகள் முடிவடைந்ததும் இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆவணங்கள் பிரதேச சபையிடம் கையளிக்கப்படும் என்றார். (கா)

# வடபிராந்திய திணைக்களமாக தரமுயர்வு

(யாழ்ப்பாணம்)

இதுவரை மாவட்ட அலுவலகமாக இயங்கிவந்த விலை மதிப்பீட்டுத் திணைக்களம் வடபிராந்திய விலை மதிப்பீட்டுத் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்திற்கு பதில் பிராந்திய மதிப்பீட்டாளராக விமல் நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார் என மாவட்ட மதிப்பீட்டாளர் எஸ்.ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களமாக இயங்கிய போது எமது சில மதிப்பீடுகள் அனுராதபுரத்திலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அவர்களின் ஆலோசனைப் படியே செயற்பட்டது.

இதனால் சில தாமதங்கள் ஏற்பட்டன. தற்போது தரமுயர்த்தப்பட்டதால் இங்கேயே அந்தப் பணிகள் மேற்கொள்ளலாம். இதனால் வீண் தாமதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன. பெரும்பாலும் ஜனவரி மாதம் முதல் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள அலுவலகங்களும் இதன் கீழ் இயங்கும் எனத் தெரிவித்தார். (கா)

# ரிசானாவை விடுவிக்க ஏற்பாடு

(கொழும்பு)

சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ரிசானா நபீக்கை விடுதலை செய்வது தொடர்பில், எவ்வளவு அபராதத்தையும் வழங்க தயாராக இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் டிலான் பெரேரா கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது இதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இரண்டு தரப்பின் அனுமதியும் அவசியப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.